பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 17 செவ்வாய்க்கிழமை (02-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:343

# போரினால் அழிந்த வடக்கு - கிழக்கைப் புனரமைக்க ஜப்பானிய அரசு நேரடி உதவிகளை வழங்கவேண்டும்

## தன்னைச் சந்தித்த அகாஷியிடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை



கிளிநொச்சி,நவ.2

சமாதானப் பேச்சுக்கள் இப்போதைக்கு ஆரம் பிக்கும் சாத்தியங்கள் தெரியவில்லை என்பதால், இரு தசாப்தங்களாகப் போரினால் அழிந்து போயுள்ள வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்பதற்கு ஜப்பான் நேரடியாக உதவி களை வழங்க வேண்டும்.

நேற்றுக் கிளிநொச்சியில் தன்னைச் சந்தித் துப் பேசிய ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாஷி யிடம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு வலி யுறுத்தினார்.

ஐரோப்பிய நாடுகளுக்கான தனது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நேற்று அதி காலையில் வன்னி திரும்பினார். பகல் 11 மணி யளவில் யசூசி அகாஷி விமானப்படை ஹெலி யில் கிளிநொச்சி வந்துசேர்ந்தார்.

விடுதலைப் புலிகளின் சமாதானச் செயல கத்தில் பகல் 11.45 மணியளவில் அவர் தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். சுமார் ஒரு மணி நேரம் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

அகாஷியுடன் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான அதிகாரி யுடாகாகிகுடா ஹிடே கைஹட்டா நாகா, ஜப்பானிய தூதரகத்தின் பாதுகாப்புக் கான 2ஆவது செயலர் கப்பெய்ன்டெருமாஸா, தூதரக 2ஆவது செயலர் கென்ஜிமியாட்டா ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர். புலி களின் சார்பில் தமிழ்ச்செல்வன், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமா தானச் செயலகத்தைச் சேர்ந்த தமிழ் அலை ஆகியோர் பங்கேற்றனர்.

சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன், அரசிடம் இருந்து ஆக்க பூர்வமான எந்தச் செய்தியையும் அகாஷி எடுத்து வரவில்லை என்று தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய சூழ்நிலையில், விடுதலைப் புலி களின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க எதிர்க்கட்சிகளும் தெற்கில் உள்ள அரசியல் கட்சிகளும் ஆதரவைத் தெரிவித் துள்ளன. இதனை அரசு நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை

(2ஆம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகம் பற்றி மட்டும் பேச்சு நடத்த ஜனாதிபதி தயாராம்!

## ஜப்பானின் தூதுவர் அகாஷிக்குத் தெரிவிப்பு நோர்வே மூலம் அறிவிக்கப் புலிகள் கோரிக்கை



கிளிநொச்சி,நவம்பர்2

**விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை குறித்து மட்டும் பேச்சுகளை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராக இருக்கின்றார்.**

**ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு கூறியிருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**அதுதான் ஜனாதிபதியின் தற்போதைய நிலைப்பாடு என்றால், அதனை நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் தங்களுக்கு உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தும்படி விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர்.**

ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி நேற் றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல் வன் தலைமையிலான புலிகளின் குழுவினரைச் சந்தித்தார்.

அப்போதே இடைக்காலத் தன்னாட்சி அதி காரசபை வரைவின் அடிப்படையில் பேச்சு நடத்து வதற்குத் தயார் என்ற முடிவை ஜனாதிபதி குமாரதுங்க தமக்குத் தெரிவித்திருக்கிறார் என்ற தகவலை அகாஷி, புலிகளின் பிரதிநிதிகளுக்கு வெளியிட்டார் என நம்பகரமாக அறியவந்தது.

அது குறித்து, புலிகளின் பிரதிநிதிகளும் அகாஷிக்குப் பதில ளித்தனர்.

"ஜனாதிபதி அப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டார் என்றால் நல்லது. ஆனால், அவர் எப்போதும் இப்படித் தான் ஒன்றைச் சொல்வார். வேறொன்றைச் செய்வார். தனது நிலைப்பாட்டில் உறுதியா கவும் இருக்கமாட்டார். எனவே, இடைக்காலத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா – ரணில் இன்று சந்திப்பு

கொழும்பு,நவ.2

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வைச் சந்தித்துப் பேசுகின்றார்.

ஜனாதிபதி அமைத்துள்ள சமாதானம் மற் றும் நல்லிணக்கத்துக்கான தேசிய ஆலோச னைக் கவுன்ஸிலில் ஐ.தே.கட்சியையும் பங்கு பற்றவைக்கும் முயற்சியாகவே ஜனாதிபதி இந் தச் சந்திப்பில் ஈடுபடுகிறார் எனத் தெரிவிக் கப்படுகிறது. (க-4-6)

## ஜனாதிபதியின் நிலைப்பாட்டைப் புலிகளுக்கு தெரியப்படுத்தினேன் என்கின்றார் அகாஷி!

கிளிநொச்சி,நவ.2

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான தமது நிலைப்பாட்டின் சாராம் சத்தை ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார். அதை விடுதலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்தும் படி அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். அந் தச் செய்தியை விடுதலைப் புலிகளுக்குத் தெரி வித்தேன். ஆனால், அந்த விவரத்தை வெளி யிட முடியாது.

- இப்படிக் கூறினார் ஜப்பான் விசேட தூதர் யசூசி அகாஷி.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் செய்தி யாளர்களிடம் அவர் இப்படிக் கூறினார். செய்தி யாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கை யில் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதியுடன் நீண்ட நேரம் பேசினேன். பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான தமது நிலைப்பாட்டின் சாராம்சத்தை அவர் என்னி டம் கூறினார். அந்தச் செய்தியை விடுதலைப்

(16ஆம் பக்கம் பார்க்க)

# 2007 இல் உலகக் கிண்ணத்தை வென்றால் ஒருநாள் போட்டியிலிருந்து முரளி விலகுவார்

## யாழ்ப்பாணத்தில் நேற்று அவரே தகவல்



யாழ்ப்பாணம்,நவ.2

2007ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் உலகக்கிண்ணப் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றால், ஒருநாள் போட்டி களில் இருந்து விலகி விடுவேன் என்று சுழற் பந்துவீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

உலக உணவுத்திட்டத்தின் பட்டினிக்கு எதிரான அமைப்பின் தூதரான முரளிதரன் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அத்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.

நேற்றுமாலை யாழப்பாணத்தில் அவர் நடத திய செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள் விகளுக்கு அவர் பதில் அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற முழுப் பங்களிப்பையும் வழங்கியிருந்தேன். அதேபோன்று அடுத்த உலகக் கிண்ணத்தை இலங்கை கைப் பற்ற முழுப் பங்களிப்பையும் வழங்குவேன்.

பந்துவீச்சில் உலக சாதனை நிலைநாட்ட வேண்டும் என்பது எனது முழு நோக்கமும் இல்லை. குழுவாகச் செயற்பட்டு, எவ்வாறு அணியை வெற்றிபெறச் செய்யவேண்டும் என் பதே எனது முழு நோக்கமுமாகும்.

ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன எனக்குச்சவாலானவர் அல்லர். அவர் தனது நாட்டுக்காக விளையாடுகிறார். நான் எனது நாட்டுக்காக விளையாடுகிறேன். அவர் தனது

(16ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி இருவர் மரணம்!

யாழ்ப்பாணம்,நவ.2

உடுவில், மல்வம் பகுதியில் நேற்று அதி காலை மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரி ழந்தனர். கோழி திருட இவர்கள் சென்ற சம யம் மின் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

தாழையடி, திருநெல்வேலியைச் சேர்ந்த பரமசாமி ஆனந்தபாபு, உடுவில், மல்வம் பகுதி யைச் சேர்ந்த கந்தசாமி மோகன் ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர்.

மின்சாரம் தாக்கியதில் மோகனின் வலது கையில் பெரும் வெடிப்புக் காயம் காணப்பட்ட தாகவும், ஆனந்தபாபுவின் இரு கால்களின் பெருவிரல்களும் மின் தாக்குதலுக்கு இலக்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்






நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்த உலக உணவுத் திட்டத்திற்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் யாழ்.செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதை முதலாவது படத்தில் காணலாம். மேற்படி திட்டத்தின் கீழ் யாழ்.பரியோவான் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்களைக் கையளிக்கும் வைபவத்தில் உலக உணவுத்திட்ட பட்டினிக்கு எதிரான அமைப்பின் தூதரும் பிரபல சுழற்பந்துவீச்சாளருமான முத்தையா முரளிதரன் கலந்துகொண்டிருந்த காட்சிகளை ஏனைய படங்களில் காணலாம். (படங்கள்:தீபன்,வசந்தன்)

### 5 கோடி ரூபா செலவில்

# சர்வதேச விளையாட்டரங்கு கிளிநொச்சியில் அமையும்!

### யாழ்.வந்த முரளிதரன் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.2

கிளிநொச்சியில் 5 கோடி ரூபா செலவில் சர்வதேச விளையாட்டரங்கு ஒன்றை அமைக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஏற்பாடு செய்து வருகின்றது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள வீரர்களும் தேசிய மட்டத்தில் விளையாடவேண்டும். இங்கு தகுதியான வீரர்கள் இருந்தும் அவர்கள் போதிய வசதி இல்லாததால் தேசியமட்டத்துக்கு வர முடியாதுள்ளனர்.

இதுபற்றி கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவருடன் பேசியுள்ளேன்.

கிளிநொச்சியில் சர்வதேச விளையாட்டரங்கையும் மேலும் 5 இடங்களில் சாதாரண விளையாட்டு மைதானங்களையும் அமைக்க நடவடிக்கை எடுப்பதாக அவர் என்னிடம் கூறினார் - என்றார் முரளிதரன்.

கிளிநொச்சிக்கு இன்று செல்லும்போது விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திப்பீர்களா எனக் கேட்டதற்கு, அவர்களைச் சந்திக்க ஆவலாக இருக்கின்றேன். நாளை (இன்று) அங்கு போகும்போது சந்திக்க முயற்சிப்பேன்.

அவர்களிடம் பல விடயங்கள் குறித்து நான பேசவேண்டும். அவர்களும் பல விடயங்கள் குறித்து என்னுடன் பேசவிரும்புவார்கள் - என நினைக்கிறேன் என்று கூறினார். (3-10)

# குடிதண்ணீர் விநியோகம் துண்டிக்கப்பட்டமை வடிகால் அமைப்புச் சபையின் அடாவடித்தனம்

### குழாய் நீர் நுகர்வோர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,நவ.2

மழை காலத்தில் நல்ல குடிதண்ணீரை விநியோகித்து தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்க வேண்டிய பொறுப்பை உணராது தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை கந்தரோடை மக்களுக்கான குழாய் நீர் விநியோகத்தைத் துண்டித்துள்ளமை வேதனை தருகின்ற விடயம்; அடாவடித்தனமான செயலும்கூட.

- இவ்வாறு கந்தரோடை குழாய் நீர் நுகர்வோர் சங்கத் தலைவர் ஏ.தேவராசன் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

30 குடிதண்ணீர் விநியோகப் பகுதிகள் நிறுவப்பட்டிருந்தன. இவற்றில் 20 பகுதிகளுக்கான விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. கடந்த 29 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கந்தரோடையில் உள்ள குழாய் நீர் பாவனையாளர்கள் கலந்துகொண்டு நிலுவைப் பணம் தொடாபாகத் தமது ஒப்பந்தத்தில் சரத்துக்கள் எதுவும் இல்லை எனத் தெரிவித்தனர்.

1999 ஆம் ஆண்டு இத்திட்டத்தைத் தாம் பொறுப்பேற்று நடத்துவதாகப் பிரதேச சபையினர் கேட்டபோது அது கையளிக்கப்படவில்லை. இப்போது அடாவடித்தனமான நடவடிகையில் வடிகால் அமைப்புச் சபையினர் ஈடுபட்டமை வேதனைக்குரியது - என்றுள்ளது.

மேலும் கடந்த 30 ஆம் திகதி உதயனில் வெளியான நீர்வழங்கல் வடிகால் சபை அறிக்கை தவறானது எனவும் நுகர்வோர் சங்கச் செயலாளர் குற்றஞ்சாட்டியுள்ளார். (8)

# கடத்தப்பட்ட இலங்கையரை விடுவிக்கத் தீவிர முயற்சி

ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட இலங்கைத் தமிழரான தினேஷ் ராஜரத்தினத்தை விடுவிக்க குவைத், லெபனான், கட்டார் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் தூதுவர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர் என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வவர்ணபால தெரிவித்தார்.

கடத்தப்பட்டவரை விடுவிப்பதற்கு, குவைத்தில் உள்ள இந்தியத் தூதுவரின் அனுபவத்தைக் கேட்டறிவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இந்தியர்களை விடுவிப்பதில் அவர் வெற்றிகரமாகப் பங்காற்றியிருந்தார். எனவே, இலங்கையரை விடுவிப்பதில் அவரது அனுபவம் தமக்குப் பெரிதும் உதவும் என்று இலங்கை அதிகாரிகள் நம்புகின்றனர்.

தனது கணவனை விடுவிக்குமாறு தினேஷ் கார்த்திக்கின் மனைவி விடுத்த உருக்கமான வேண்டுகோள் ஈராக்கிய ரைம்ஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது தீவிரவாதிகளின் பார்வைக்குப்படும் எனத் தாம் நம்புகிறார் என்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வவர்ணபால தெரிவித்தார். (க-4-6)

## காத்தான்குடியில் அமைதி நிலை

கொழும்பு,நவ.2

காத்தான்குடிப் பகுதியில் நேற்று அமைதி நிலவியது.

நேற்றுமுன்தினம் இப்பகுதியில் முஸ்லிம்களின் இருமார்க்கப் பிரிவுகளிடையே ஏற்பட்ட பதற்றத்தையடுத்து நேற்றுமுன்தினம் இரவு 7 மணிமுதல் நேற்றுக்காலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு இருந்தது. நேற்றுக்காலை அது நீக்கப்பட்டது.

எனினும்,வீதிகளிலும் பொது இடங்களிலும் பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். (க-4-6)

## இந்தியத் தளபதி கொழும்பு வந்தார்

கொழும்பு,நவ.2

இந்திய இராணுவத் தளபதி ஜேம்சி நிச்சட் நேற்றுப் பிற்பகல் கொழும்பு வந்து சேர்ந்தார்.

இலங்கை இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொடவை அவர் நேற்று மாலை சந்தித்துப் பேசினார்.

இதனைத் தொடர்ந்து வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்தார். தொடர்ந்து இந்தியாவின் இலங்கைக்கான தூதுவரையும் சந்தித்துள்ளார்.

இன்று ஜனாதிபதியையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் சந்திக்கின்றார்.

இரண்டு நாள்கள் இலங்கையில் தங்கும் இவர் நாளை அனுராதபுரம், வவுனியா ஆகிய இடங்களில் உள்ள இராணுவத் தளங்களுக்கும் செல்லவுள்ளார். (4-6)

## பரிசளிப்புவிழாவும் சேவைநலன் பாராட்டும்

மானிப்பாய்,நவ.2

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் வித்தியாலய அதிபரின் சேவைநலன் பாராட்டுவிழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் அ.நடராசா தலைமையிலும், பாராட்டு விழா திருமதி ஞா.கணேசலிங்கம் தலைமையிலும் நடைபெறும். இந்த விழாக்களில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொள்வார். (எ-6-90)

# போரினால் அழிந்த வடக்கு – கிழக்கைப் புனரமைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்திய பின்னரே இறுதித் தீர்வு காணவேண்டும் என்ற புலிகளின் நிலைப்பாட்டையும்கூட தெற்கிலே பல கட்சிகள் ஆதரித்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தை இலங்கை அரசு பற்றிப்பிடித்துப் பேச்சுக்கான சரியான சூழலை உருவாக்கவேண்டும் என்பதை அகாஷியிடம் நாம் எடுத்து விளக்கி இருக்கிறோம்.

#### புதிதாக ஏதுமில்லை

சமாதானச் சூழ்நிலை உருவாகி இரண்டு வருடங்கள் கடந்துவிட்டபோதிலும் அது மக்களுக்கு நன்மையளிக்கவில்லை. இதன் காரணமாகச் சமாதானத்தின்மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள்.

இன்றைய சந்திப்பில் ஜனாதிபதியிடம் இருந்து ஆக்கபூர்வமான செய்திகள் எதனையும் ஜப்பானியப் பிரதிநிதிகள் கொண்டு வரவில்லை. வழமை போன்று அரசும் ஜனாதிபதியும் கூறும் தகவல்களைத்தான் கொண்டுவந்திருந்தார்கள். இத் தகவல்கள் ஜப்பானியப் பிரதிநிதிகளுக்கு வேண்டுமானால் புதிதாக இருக்கலாம். ஆனால், அவை எமக்குக் கேட்டுக்கேட்டுப் பழகிப்போன பழைய கதை.

இந்த அரசு பதவிக்கு வந்த காலம் முதல் இவ்வாறான அறிக்கைகளைத்தான் தொடர்ந்து விடுத்து வருகின்றதே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

பேச்சுக்கான அடித்தள முயற்சிகள் எதனையும் எடுக்காத நிலையில் சமாதானப் பேச்சை எப்படி ஆரம்பிக்க முடியும்?

#### புனரமைப்புக்கு உதவி

வடக்கு -கிழக்கில் புனரமைப்புப் பணிகளுக்கு ஜப்பான் அரசு நேரடியாக உதவிகளை வழங்க வேண்டும் என்று அகாஷியிடம் கோரினோம். 25 வருடங்களாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுடைய வாழ்விடங்கள், அடிப்படைக் கட்டுமானங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டுவிட்டன. அவர்களின் அவசரமான மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அந்தக் கடமை புலிகளுக்கு உள்ளது. அதற்காகப் புலிகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு ஜப்பான் நேரடி உதவிகளை வழங்க வேண்டும் என்று கோரினோம்.

ஒரு தீர்வு ஏற்படும் சூழல் இப்போதைக்குக் கனிவதாக இல்லை. சமாதான முயற்சிகள் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அதற்காகக் காத்துக்கொண்டிருக்காமல் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு ஜப்பான் உதவவேண்டும் - என்று கேட்டோம்.

#### இந்தியாவுடனான ஒப்பந்தம்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்புக்கும் இடையிலான வலுச் சமநிலையிலேயே ஏற்பட்டது. இந்த வலுச் சமநிலை சீர்குலைக்கப்பட்டால் அது நிச்சயம் சமாதானத் தீர்வையும் அமைதி முயற்சிகளையும் நெருக்கடி நிலைக்குள் தள்ளும்.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து உத்தியோகபூர்வமாகத் தெரிந்துகொள்ளாமல் அதிகாரபூர்வமாக எதனையும் கூறமுடியாது. ஆனால், அத்தகைய ஓர் ஒப்பந்தம் உண்மையானதாக இருந்தால் அதனை எமது மக்களோ விடுதலைப் புலிகளோ ஒரு போதும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அத்தகைய ஒப்பந்தம் ஒரு பக்கச்சார்பானதாக அமைந்துவிடும்.

#### மாற்றுயோசனைகள்

புலிகள் அரசு, ஐ.தே.கட்சியின் முன்னைய அரசு ஆகியன முன்வைத்த இடைக்கால நிர்வாக வரைபுகள் குறித்துப் பேச்சு மேசையில் ஆராயலாம் என்று [illegible] மங்கள சமரவீர [illegible] யானது. அவ்வாறு மூன்று யோசனைகளையும் பேச்சு மேசையில்வைத்து ஆராய்ந்தால் எந்த ஒரு தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாது. இதுதான் யதார்த்தம்.

நாம் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையிலும் உரிமை கேட்டுப் போரிடுபவர்கள் என்ற வகையிலும் புலிகளால் ஒரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எமது மக்களின் தேவைகள் குறித்து சர்வதேச சட்டவல்லுநர்களாலும் எமது சட்டவல்லுநர்களாலும் நன்கு ஆராயப்பட்ட பின்பே எமது யோசனைகள் தயாரிக்கப்பட்டன. கடந்த பொதுத்தேர்தலின் போது இந்த யோசனைக்கு மக்கள் ஆணையும் ஆதரவும் பெறப்பட்டுள்ளது. எனவே, மாற்று யோசனைகளை எமது மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதனைப் புலிகளும் ஏற்கமாட்டார்கள்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்து தெற்கிலே உருவாகியுள்ள விமர்சனங்கள் பற்றி சுவிற்ஸர்லாந்திலே சட்டவல்லுநர்களுடன் விரிவாக ஆராய்ந்தோம். சர்வதேச அளவிலே முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகள், இடைக்காலக் கட்டமைப்புகள் போன்றவற்றுடன் எமது வரைபை ஒப்பிட்டு ஆராய்ந்தோம்.

சர்வதேச சட்டவல்லுநர்களாலும் எமது சட்டவல்லுநர்களாலும் தமிழ்மக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபை அரசு மனிதாபிமான முறையில் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு.

தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து பிழையாகக் கொடுக்கப்படும் விமர்சனத்துக்குச சரியான பதிலை, எதிர்காலத்தில் கொடுப்ப[illegible] பற்றி சுவிற்ஸர்லாந்துக[illegible]ில் ஆராயப்பட்டது.

#### ஐரோப்பிய விஜயம்

விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினது ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் பெரும் பயனுள்ளதாக அமைந்தது. எமது உண்மையான நிலைப்பாடு என்ன என்பதை அந்த நாடுகளுக்கு நன்கு எடுத்து விளக்கியுள்ளோம்.

விடுதலைப் புலிகளே சமாதானத்தின் எதிரிகள் என்றும் பேச்சுக்கு முன் வருகிறார்கள் இல்லை என்றும் ஜனாதிபதியும் அவரது அமைசசர்களும் வெளிநாடுகளில் உண்மைக்குப் புறம்பாகப் பிரசாரம் செய்து வந்தனர். அவர்களின் இத்தகைய பிரசாரத்தை எமது இந்தப் பயணத்தின் மூலம் நாம் முறியடித்துள்ளோம். உண்மை நிலை என்ன என்பதை சர்வதேச சமூகத்துக்கு நேரடியாகச் சென்று விளக்கியுள்ளோம். குறிப்பாக, ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும் எமது நிலை குறித்து விளக்கியுள்ளோம். எமது விளக்கம் சர்வதேச சமூகத்திற்குத் திருப்தியைக் கொடுத்திருக்கின்றது என்றே நாம் கருதுகின்றோம்.

- இப்படி தமிழ்ச்செல்வன் மேலும் கூறினார்.

எதிர்வரும் நாள்களில் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏதும்வரும் எனக் கருதுகிறீர்களா என செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு -

அவ்வாறு இடம்பெறலாம் என நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக கடுமையான முயற்சிகளை எடுக்கின்றோம். அதைப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு அரசின் கைகளிலேயே உள்ளது.

பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும்படி சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் என நம்புகிறோம். அதன்மூலம் எதிர்காலத்தில ஏதாவதொரு மாற்றத்தைக் காணலாம் எனக் கருதுகின்றோம் - என்றார் அவர். (க-3-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இன்று ஜனாதிபதித் தேர்தல்!

நியூயோர்க்,நவ.2

அமெரிக்காவில் அதிபர் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இதில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோன் கெரிக்கும் இடையே நூலிழை வித்தியாசத்தில் வெற்றிவாய்ப்பு இருந்துவருகிறது.

அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பிலேயே இந்த விவரம் தெரியவந்துள்ளது.

அதிபர் தேர்தலில் யாருக்கு வெற்றிவாய்ப்பு என்பது குறித்து மூன்று தினங்களுக்கு முன்பு கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகியுள்ள இந்தக் கருத்துக் கணிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு 50 சதவீத ஆதரவு உள்ளது. இவரை எதிர்த்துப் போட்டியிடும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோன் கெரிக்கு 44 சதவீதமும் சுயேச்சை வேட்பாளருக்கு ஒரு சதவீதமும் ஆதரவு காணப்படுகிறது.

கருத்துக் கணிப்பில் ஜோர்ஜ் புஷ் முன்னிலையில் இருந்துவந்த போதிலும் வாக்குப் பதிவைப் பொறுத்தே முடிவுகள் தெரியவரும். ஏனெனில், இதற்கு முன்பு நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் புஷ்ஷுக்கு 48 சதவீதமும் கெரிக்கு 46 சதவீதமும் மக்கள் ஆதரவு இருந்தது. இதனால், இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுவது தெளிவாகத் தெரிகிறது.

புதிய வாக்காளர்களைப் பொறுத்தவரை புஷ்ஷுக்கு ஆதரவாக வாக்களிப்பார்களா அல்லது கெரிக்கு ஆதரவாக வாக்களிப்பார்களா என்பது தெரியவில்லை. புதிய வாக்காளர்கள் பெரும் குழப்பத்தில் இருந்து வருகின்றனர்.

இந்நிலையில் சர்வதேச பயங்கரவாதி பின்லேடன் உரையாற்றும் வீடியோ நாடா வெளியாகியுள்ளது. அமெரிக்காவை மிரட்டும் தொனியில் பின்லேடனின் பேச்சும் அதில் அமைந்துள்ளது. பின்லேடனை உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்படும் என மூன்றாண்டுகளுக்கு முன்பு புஷ் உறுதி கூறியிருந்தார். அந்த வாக்குறுதியை புஷ் நிறைவேற்றத் தவறிவிட்டார். இது அவருக்கு பெரும் 'பின்னடைவை ஏற்படுத்தி வருகிறது.

எனினும், புளோரிடா மாகாணத்தில் புஷ்ஷுக்கு அதிகமான ஆதரவு காணப்படுகிறது. மேலும், புஷ்ஷின் சகோதரர் ஜெப் புஷ் இங்கு ஆளுநராகப் பதவி வகித்து வருகிறார். அவர் மேற்கொண்டு வரும் தீவிரப் பிரசாரம் புஷ்ஷின் வெற்றிவாய்ப்புக்கு அதிக பலம் சேர்த்து வருகிறது.

## ஜோன் கெரிக்கு பிரிட்டனில் ஆதரவு

அமெரிக்காவில் இன்று நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் புஷ்ஷைவிட கெரியே வெற்றி பெறவேண்டும் என பிரிட்டனில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர்.

அமெரிக்காவில் இன்று அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. அதிபர் பதவிக்கு குடியரசுக் கட்சி வேட்பாளராகத் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் இவரை எதிர்த்து ஜனநாயகக்கட்சி சார்பில் கெரியும் போட்டியிடுகின்றனர்.

உலகமே மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தல் குறித்து பிரிட்டனில் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. அதில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கெரியே வெற்றி பெறவேண்டும் என்று பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச அளவிலான பாதுகாப்பு கெரியின் கைகளில்தான் பாதுகாப்பாக இருக்க முடியும் என்று பலரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மேலும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கெரியின் வெற்றி பிரிட்டன் பிரதமர் ரொனி பிளயரின் சர்வதேச அளவிலான செல்வாக்கில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சாட் நாட்டில் மோதல்: 12 பேர் மரணம்!

சாட் நாட்டின் தென்பகுதியில் உள்ள பெபிஜா என்ற இடத்தில் இடம்பெற்ற மோதல்களில் 12 பேர் கொல்லப்பட்டனர். இதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. அந்த நகரில் வெளியில் இருந்து குடிபுகுந்தவர்களுக்கும் அங்குள்ள நிரந்தர வாசிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலே இந்த வன்செயலுக்குக் காரணம் என்று நகரவாசிகள் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாகப் பொதுமக்கள் ஆயுதங்களை வைத்திருப்பதும் வெவ்வேறு இனத்தவர்கள் சமாதான சகவாழ்வு நடத்த முடியாமல் இருப்பதும் இந்த மோதல்களுக்குக் காரணம் என்று மனித உரிமைகள் அமைப்பு கூறியிருக்கின்றது. (க)

## ரஷ்யத் தளபதி சுட்டுக் கொலை!

மொஸ்கோ,நவ.2

ரஷ்ய விமானப் படையில் உயர் பதவி வகித்த வான் படைத் தளபதி நேற்றுமுன்தினம் இனந்தெரியாத ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மொஸ்கோவிற்கும், பெலாரஸுக்கும் இடையே காரில் இந்தத் தளபதி சென்றபோது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

இவர், ரஷ்யாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தொலைவீச்சு விமானப் படையின் பிரதித் தளபதியுமாவார். (க)



வியட்நாம் தலைநகர் ஹனோயில் கடந்த 30ஆம் திகதி நடந்த 'மிஸ் வியட்நாம்' போட்டியில் என்குயென்தி ஹுயென் என்ற மாணவி அழகியாகத் தெரிவுசெய்யப்பட்டார். அவர் (நடுவில்) 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற அழகிகளுடன் 'போஸ்' கொடுக்கும் காட்சி இது.

## ஒஸாமா பின்லேடனின் அச்சுறுத்தலால் அமெ. முழுவதும் பாதுகாப்பு அதிகரிப்பு

வாஷிங்ரன்,நவ.2

அமெரிக்கா மீது மேலும் தாக்குதல் நடத்தப்படும் என்று ஒஸாமா பின்லேடன் மிரட்டியதைத் தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் டாம் ரிட்ஜ் கூறினார்.

அல்கெய்டா இயக்கத் தலைவர் ஒஸாமா பின்லேடனின் பேச்சை அல் ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அதில் 2001செப்ரெம்பர் 11ஆந் தேதி நியூயோர்க் நகரம் மீது தாக்குதலை நடத்தியது நான்தான் என்று ஒப்புக்கொண்ட பின்லேடன், அமெரிக்காமீது மீண்டும் தாக்குதல் நடத்தப்படும் என்று எச்சரித்தார்.

இதுகுறித்து அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் டாம்ரிட்ஜ் செய்தியாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில் -

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது தாக்குதல் நடத்தப்படும் என்று எந்த உளவுத் தகவலும் கிடைக்கவில்லை. எனவே, மக்கள் பயமின்றி வாக்களிக்கச் செல்லமுடியும்.

பின்லேடன் பேசிய வீடியோ நாடா அண்மையில் ஒளிபரப்பானது. இதில் அந்த வீடியோ நாடாதான் புதியதே தவிர, அவருடைய எச்சரிக்கை பழையதுதான். செப்ரெம்பர் 11ஆம் திகதி முதல் இந்த மிரட்டல் இருந்துகொண்டுதான் உள்ளது.

நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டமைப்பு, மாநில மற்றும் உள்ளூர் அதிகாரிகள் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர். தேர்தலையொட்டியும் இந்தப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்குப் பிறகும் அது நீடிக்கும்.

கடல் மார்க்கங்களிலும், விமான நிலையங்களிலும், துறைமுகங்களிலும் சில அதிகாரிகள் மாற்றப்படுவார்கள். அப்பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்படும் - என்றார்.

## ஈராக்கில் ரொக்கெட் தாக்குதல் 15 பேர் பலி; 8 பேர் காயம்!

திக்ரித்,நவ.2

ஈராக்கில் திக்ரித்நகரில் நேற்று நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதல் காரணமாக 15 பேர் உயிரிழந்துள்ளனர். 8 பேர் காயமடைந்தனர். பக்தாத்தின் 110 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள திக்ரித் நகரில் ஹோட்டல் ஒன்றின் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சதாம் ஹுஸைனின் சொந்த நகரமே திக்ரித் ஆகும். இந்த நகரில் 800 மீற்றர் தூரத்தில் அமெரிக்காவின் தளமும் உள்ளது. அங்கிருந்து சென்ற அமெரிக்கத்துருப்புக்கள் தாக்குதல் நடத்தப்பட்ட ஹோட்டலைச் சுற்றிவளைத்திருந்தனர்.

சுனி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இடத்தில் வேலை செய்வதற்காகச் சென்ற ஷியா தொழிலாளர்களே உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளர்ச்சியாளர்களே இந்த ரொக்கெட் தாக்குதலை நடத்தினார்கள் என அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்தனர். (க)

## தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்க நவாஸ் ஷெரீப்புக்கு அனுமதி மறுப்பு!

இஸ்லாமாபாத்,நவ.2

தனது தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்க பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நவாஸ் ஷெரீப்பும் அவரது குடும்பத்தினரும் தற்போது சவூதி அரேபியாவிலுள்ள ஜித்தாவில் தங்கியுள்ளனர்.

நவாஸ் ஷெரீப்பின் தந்தை மியான் முகம்மது ஷெரீப் ,கடந்த வெள்ளிக்கிழமை இரவு மாரடைப்பால் காலமானார்.

அவருடைய உடல் ஜித்தாவிலிருந்து பாகிஸ்தானிலுள்ள லாகூருக்கு கொண்டு வரப்படும். பின்னர் ராய்விண்ட என்ற இடத்தில் இறுதிச் சடங்கு நடைபெறும்.

இதில் பங்கேற்க பாகிஸ்தானுக்குவர அனுமதிக்குமாறு நவாஸ் ஷெரீப் கோரியிருந்தார். ஆனால், இக்கோரிக்கையைப் பாகிஸ்தான் அரசு நிராகரித்துவிட்டது.

## பக்தாத்தின் பிரதி ஆளுநர் ஈராக்கில் சுட்டுக் கொலை!

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் பிரதி ஆளுநர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஹதம் காமில் அப்துல் பதஹ் என்பவரே மேற்படி சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார். இவரது இரண்டு மெய்ப்பாதுகாவலர்களும் படுகாயமடைந்தனர்.

பள்ளிவாசலில் தொழுதுவிட்டுத் தனது காரில் சென்றுகொண்டிருக்கும்போதே இவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

ஈராக்கின் தென்பகுதியில் உள்ள தோரா மாவட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஜனவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கான வாக்காளர் பதிவுகள் இடம்பெற்றிருக்கின்ற வேளையிலேயே இவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

## வெளிநாட்டவர் மூவரை விடுவிக்க ஆப்கான் தீவிரவாதிகள் நிபந்தனை!

காபூல்,நவ.2

தாங்கள் கடத்திவைத்துள்ள மூன்று வெளிநாட்டவர்களை விடுவிக்க ஆப்கான் தீவிரவாதிகள் நிபந்தனைகளை விதித்துள்ளனர். இந்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறினால் மூவரையும் சுட்டுக்கொல்லப்போகிறார்கள். எனவும் அவர்கள் மிரட்டியுள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த அனெட்டா பிளானிகான், கொஸாவோ நாட்டைச் சேர்ந்த ஹெபிபி, பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த அஞ்சலிட்டோ நயான் என்பவரையும் ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த வியாழக்கிழமை துப்பாக்கி முனையில் காபூல் நகரிலிருந்து கடத்திச் சென்றனர்.

இம்மூவரும் ஆப்கானிஸ்தானில் ஒக்ரோபர் 9ஆம் திகதி நடைபெற்ற அதிபர் தேர்தலைப் பார்வையிடுவதற்காக ஐ.நா.சபையின் மூலம் காபூலுக்கு அழைத்து வரப்பட்டவர்கள். ஆப்கானிஸ்தானை விட்டு பிரிட்டிஷ் மற்றும் கொஸாவோ இராணுவத்தினர் வெளியேற வேண்டும். சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஆப்கான் பிரஜைகளை விடுவிக்கவேண்டும் என்பது உள்ளிட்ட 4 நிபந்தனைகளை இத்தீவிரவாதிகள் விதித்துள்ளனர். (க)




## இரத்தப் புற்றுநோய் அரபாத்துக்கு இல்லை!

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்துக்கு இரத்தப் புற்றுநோய் இல்லை என்பது முதல் கட்டப் பரிசோதனையில் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அவருடைய நிதி ஆலோசகர் முகம்மது ரஷீத் தெரிவித்தார்.

கிளாமார்டில் உள்ள இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள அரபாத்துக்கு செய்யப்பட்ட முதல்கட்டப் பரிசோதனையில் இது உறுதிசெய்யப்பட்டது என்று ரஷீத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இருப்பினும் அவரது உடல்நிலை திடீரென மோசமானதற்கான காரணங்களை அறிய பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த இரு வாரங்களாக மோசமாக இருந்த அரபாத்தின் உடல்நிலை கடந்த புதன்கிழமை மிகவும் தீவிரமாக மோசமடைந்தது. அதையடுத்து வெள்ளிக்கிழமை அவர் பலஸ்தீனத்திலிருந்து சிகிச்சைக்காக விமான மூலம் பாரிஸ் கொண்டுசெல்லப்பட்டார். அங்குள்ள இராணுவ மருத்துவமனையில் தற்போது அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

தற்போது அவரது உடல்நிலை சற்றுத் தேறியுள்ளதாகவும், அவரால் இப்போது சாப்பிடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ரஷீத் மேலும் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறைப் பிரதேச சபை புலோலி
## சந்தைகள் இறைச்சிக்கடைகளுக்கான
# கேள்வி அறிவித்தல் - 2005

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 2004.11.18 நண்பகல் 12.00மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 2004.11.19 முற்பகல் 11.30 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 2004.11.19 நண்பகல் 12.00 மணி
04. கேள்வித் தொகை கேள்விப்பத்திரப் பணம் ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறவிடப்படும்
05. மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.
06. கேள்விப் படிவங்களின் ஒரு பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதுடன், மறுபிரதியினை இந்த அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத் தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. மந்திகை மாட்டிறைச்சிக் கடை | 81900.00 | 5000.00 | 360.00 |
| 02. மானாண்டி மாட்டிறைச்சிக் கடை | 69200.00 | 3000.00 | 360.00 |
| 03. மந்திகை ஆட்டிறைச்சிக் கடை | 81300.00 | 1500.00 | 360.00 |
| 04. அல்வாய் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 18700.00 | 1500.00 | 360.00 |
| 05. மந்திகைச் சந்தை | 110000.00 | 1500.00 | 360.00 |
| 06. மானாண்டிச் சந்தை | 85900.00 | 1500.00 | 360.00 |
| 07. பொற்பதி மீன்சந்தை | 50700.00 | 1500.00 | 360.00 |
| 08. டீண்காடு மீன்சந்தை | 15200.00 | 1500.00 | 360.00 |
| 09. கற்கோவளம் சந்தை | 4800.00 | 500.00 | 180.00 |
| 10. மருதங்கேணிச் சந்தை | 2000.00 | 500.00 | 180.00 |
| 11. கெருடாவில் சந்தை | 1100.00 | 500.00 | 180.00 |

திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி,
**செயலாளர்,**
பருத்தித்துறைப் பிரதேச சபை,
புலோலி.
29.10.2004. (C/38634)(42-16-44-26)

# திறப்புவிழா அழைப்பிதழ்



எனது அன்பிற்குரிய மாணவர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும், 03.11.2004 அன்று புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாம் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் IBM, Microsoft, Sun Micro Systems, Cisco, Compaq, AT&T Labs, Intel மற்றும் HP நிறுவனங்களின் நேரடியாக இணைத் தயாரிப்பில் ஈடுபட்டு தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் விற்பனை மற்றும் சேவைகளை வழங்கவுள்ளோம். அனைத்து மாணவர்களும், நண்பர்களும் தவறாது இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன.

க.உ தயகுமார்

**UNIT**
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
மேலதிக விபரங்களுக்கு **UNIT** விளம்பரத்தைப் பார்க்கவும் (சி-38632)

### 'சல்பீனியா' அழிப்பில் மாநகர ஊழியர்கள்

யாழ்.ஆரியகுளத்தில் படர்ந்துள்ள 'சல்பீனியா' களையை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்மாநகர சபையின் ஏற்பாட்டில் இந்தக் களை குளத்தில் இருந்து அகறறப்பட்டு வருகின்றது. பிளாஸ்ரிக் படகின் உதவியுடன் மாநகர சபையின் தொழிலாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மாரி காலம் ஆரம்பித்துள்ளதையடுத்து நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இந்தப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(எ-17)

## அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்
## பதவி வெற்றிடம் - லொறிச் சாரதி
(தற்காலிகம்)
இல.312/13

எமது சங்கத்தில் லொறிச்சாரதி இல.312/13 பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன். அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கத் தொழிற்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், அள.மல்.ப.நோ.கூ.சங்கம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

1. சம்பளத்திட்டம்: 5250 - 6800
   75X10 - 80X10
2. கல்வித்தகைமை: 5ஆம் வகுப்புச் சித்தி
   அத்துடன் கனரக வாகன ஓட்டுநர்க்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
   அத்துடன் வாகனம் செலுத்துவதில் 4வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
3. வயது: 45 வயதுக்கு மேற்படக்கூடாது.

விண்ணப்பங்கள் 15-11-2004 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும். விண்ணப்பப் படிவங்களைச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அள.மல்.ப.நோ.கூ.சங்கம்,
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.
01-11-2004

- பொது முகாமையாளர்.
(சி-38635) (26)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சண்முகராஜா ரஞ்சிததேவி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகராஜா ரஞ்சிததேவி 30-10-2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகராஜா (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் ஆருயிர் மனைவியும் பகீரதன் (கப்பல் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற சுதாகரன் (Accountant) மற்றும் உஷாயினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திரமதி, சுரேஷ்குமார் (Financial Controller) ஆகியோரின் அன்பு மாமியாரும் சஞ்சீவ், தனுஷா, சுஜர்னி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 31-10-2004 ஞாயிற்றுக்கிழமை கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூராவத்தை,
சுன்னாகம். (38217)(26-16-44)

தகவல்:
பிள்ளைகள்.

## மரியாம்பிள்ளை ஆரோக்கியநாதர்
(பொலிற் - ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் மாங்குளம, கொல்லர் புளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை ஆரோக்கியநாதர் 31.10.2004 ஞாயிற்றுக்கிழமை சில்லாலையில் காலமானார்.

அன்னார் மேரிஇமல்டாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - மார்சலா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மரியம்மா பயஸ்பிள்ளை, காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை மற்றும் செசிலியா அந்தோனிமுத்து, காலஞ்சென்ற பிரான்சீஸ் மற்றும் அருட்திரு. பாவிலுப்பிள்ளை (O.M.I.), காலஞ்சென்ற விக்ரோறியா மரியாம்பிள்ளை மற்றும் இன்னாசித்தம்பி, காலஞ்சென்ற யோசவ் மற்றும் அன்னம்மா ப்ஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் றொபின் சில்லைநாதர், ஜெறிபின் ஜெகநாதர், ஜெனிற்றா புகனேஸ்வரன், அரிபின் அருள்நாதர், அருள்பின் அகிலநாதர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (06.11.2004) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை, பண்டத்தரிப்பு. (38215)(34-16-44-26)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனித்துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

விலை குறைவு, சான்பதற்காக தரம் குறைந்தவையல்ல தரமிகு உயர்ந்தவை

Attractive Opening Offer
each computer purchase has
★ Computer Table
★ Filter ★ Dust Cover ★ Mouse Pad & etc.

எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor வசதிகளுடன்

இவையெல்லாம் இலவச வீட்டில் சேர்த்தல் மற்றும் வீட்டிலேயே பராமரிப்புடன் கூடியவை

We are entirely different from others

(சி-38631)

### எமது சேவைகள் பல அவற்றுள் சில :

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்.
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்

## கொழும்பு விலையில் 3 வருட முழு உத்தரவாதம்

விசேட சலுகைப் பொதிகள்
- புதிய Multimedia Pentium IV கணனிகள் Rs. 40,000/= முதல்
  மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium III கணனிகள் Rs. 25,000/= முதல்
  ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
- புதிய Multimedia Compaq Pentium II கணனிகள் Rs. 13,000/= முதல்
  ஒரு வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை 3, 4 & 5 திகதிகள் மட்டுமே

**Universal Network of Information Technology**
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஆளும் தரப்பின் ஆள் சபாநாயகராவாரா?

"நாங்கள் இப்போது மிக நெருக்கடியான கால கட்டத்தில் இருக்கின்றோம். அடுத்துவரும் நாள்களில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படப்போகின்றன, என்ன நடக்கப்போகின்றது என்பவற்றையெல்லாம் பொறுத்திருந்து பார்ப்போம்"- என்றுகடந்த வெள்ளியன்று கொழும்பில் நடைபெற்ற - சர்வதேச ரீதியிலான கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

அடுத்துவரும் தினங்களிலும் வாரங்களிலும் பல அரசியல் திருப்பங்கள் இடம்பெறும் என்பதற்கான கட்டியம் கூறலாகவே அது அப்போது கருதப்பட்டது.

அந்த எதிர்பார்ப்பு சரியென நிருபிப்பது போல எதிர்க்கட்சித் தரப்பில்-ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அணியில்-இருந்த மூன்று முஸ்லிம் எம்.பிக்களுக்கும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சுப் பதவிகளை வழங்கி அவர்களை அரசுப்பக்கம் சேர்த்துக்கொண்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றை பிளக்கச் செய்தும் -

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அணிமாற வைத்தும் -

தனது சிறுபான்மை அரசின் தடுமாற்றத்தை - தள்ளாட்டத்தை - களைந்து அதை உறுதிப்படுத்தியிருக்கின்றார் அவர்.

இனி அடுத்த கட்ட நகர்வுகளுக்கு அவர் போக வேண்டும்.

தமக்கு இசைவான ஒருவரைத் தேர்தல் ஆணையாளர் பதவிக்குக் கொண்டு வருவதன் மூலம் தனது தற்போதைய பதவிக்காலத்தை 2006 டிசெம்பர் வரை அவர் உறுதிப்படுத்த வேண்டும். பதவியில் இருக்கும் தேர்தல் ஆணையாளர் தமது தற்றுணிபு அதிகாரத்தின் அடிப்படையில் 2005 டிசெம்பரில் தேர்தலை நடத்துவதற்கு அழைப்பு விடுவாரெனில் ஜனாதிபதி குமாரதுங்கபாடு அம்போதான்!

எனவே, தேர்தல் ஆணையாளரை வசதியான ஆளாக நியமிக்கவேண்டும். அதற்குத் தேர்தல் ஆணைக் குழு அவருக்குப் படிமானம் உள்ளதாக அமைய வேண்டும். தேர்தல் ஆணைக் குழுவைப் படிமானம் உள்ளதாக அமைப்பதாயின் அதை நிறுவும் அரசமைப்புக் கவுன்ஸில் அவர் வழி நடப்பதாக இருக்க வேண்டும். அரசமைப்புக் கவுன்ஸிலை அவர் வழி நடத்துவதாயின் அதன் தலைவராகச் செயற்படப் போகும் சபாநாயகர் அவரது ஆளாக இருக்கவேண்டும்.

ஆனால், இப்போது எதிரணியைச் சேர்ந்த டிபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டாரவே சபாநாயகராக இருக்கின்றார். எனவே, அவரை அப்பதவியிலிருந்து அகற்றித் தமது ஆளை அப்பதவியில் இருத்துவதே ஜனாதிபதியின் அவசர-அவசிய-முக்கிய-நடவடிக்கையாக இருக்கப் போகின்றது.

தற்போதைய ஜனாதிபதிப் பதவிக்காலத்தின் பின்னரும் ஆட்சி அதிகாரத்தில் தொடர விரும்பும் ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு அதைச் செய்வதற்குத் தற்போதைய அரசமைப்பு இடமளிக்காது. எனவே, அரசமைப்பை மாற்ற அவர் விரும்புகின்றார். ஆனால், அரசமைப்பை மாற்றுவதற்குத் தேவையான நாடாளுமன்றப் பெரும்பான்மை இல்லாததால் தற்போதைய அரசமைப்புக்கு முரணான விதத்தில் அதை மாற்ற முயல்கின்றார். அதை ஆளும் தரப்பு இலகுவாகச் செய்வதற்கும் தடையின்றி முன்னெடுப்பதற்கும் சபாநாயகர் ஆளும் தரப்பின் ஆளாக இருக்க வேண்டும்.

ஆகவே, ஜனாதிபதியின் அடுத்த நடவடிக்கை சபாநாயகரை மாற்றுவதுதான். அணிமாறி கட்சி தாவி ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பெரும்பான்மைப் பலத்தை உறுதிப்படுத்தியிருக்கும் உதிரிகளும் சிறுபான்மை இனங்களின் எம்.பிக்களும் எதிரணியைச் சேர்ந்த தற்போதைய சபாநாயகரை மாற்றுவதற்கு இணங்குவார்களா என்பதே இன்றைய கேள்வி.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து குத்துக்கரணம் அடித்த எம்.பிக்களின் பதவிக்காலம் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்தது. அவர்களின் குத்துக்கரணத்துக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நிச்சயம் வழக்குத் தாக்கல் செய்யும் என்பது உறுதியாகியுள்ளது. சகலதும் நீதியாக நடந்தால் சம்பந்தப்பட்ட நான்கு எம்.பிக்களும் தமது பதவியில் நீடிப்பது துர்லபமே என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இன்றைய நிலையில் சபாநாயகரை மாற்றும் நடவடிக்கைக்கு இ.தொகாவும் பெரும்பாலும் துணை போகாது என்றே கருதப்படுகின்றது.

ஆனாலும் தலைவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கைகளையோ, மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்ட விவகாரத்தையோ துரும்புச்சீட்டாகப் பயன்படுத்தி இ.தொகாவை கடைசி நேரத்தில் காலில் விழ வைக்கும் சக்தி ஜனாதிபதி தரப்புக்கு உண்டு என்றே பேச்சடிபடுகின்றது.

இதேசமயம், தற்போது அரசுபக்கம் இல்லாமல் எதிரணியில் தடக்குப்பட்டு நிற்கும் ஹெல உறுமயவினர் கூடச் சில சமயங்களில் சபாநாயக்ரை மாற்றும்முயற்சிக்கு துணை போகக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

எனவே, அந்த முயற்சியில் ஆளும் தரப்பு விரைந்து இறங்கும் என்றே எதிர்பார்க்கலாம். பட்ஜெட் சூடு பிடிக்க முன்னர் இந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் சூடு பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# அரசியல் நோக்கத்தில் பனை அபிவிருத்திச்சபை பயன்படுத்தப்படுவது வருந்தத்தக்கதொரு விடயம்

### சிவனேசன் எம்.பி.காட்டமான அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.2

அரசியல் நோக்கங்களுக்காக பனை அபிவிருத்திச்சபை பயன்படுத்தப்பட்டு வருகின்றமை வருந்தத்தக்க விடயமாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன்.

தமிழர்களுக்கே உரிய பனை அபிவிருத்திச்சபையை இலங்கை அரசு புறக்கணித்து வருவதாகத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசன் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:

1972 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ப.தெ.வ.கூ. சங்கங்களின் வளர்ச்சி கருதி 1978 இல் பனை அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் பனம் தொழில வல்லுநர்களின் வாழ்வு மேம்பாடடிற்கான வழிகாட்டல் வழங்குதல். அதற்கான திட்டங்கள் தயாரித்தல், பனம் பொருள் உற்பத்தி நிபுணத்துவம், பனை வள ஆராய்ச்சி, பனைவள அபிவிருத்தி, பனம் பொருள் சந்தைப்படுத்தல், நவீன தொழில்நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தல் என்பனவாகும். இவ்வாறு பல நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இச்சபை இன்று அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஒரு சபையாக மாறிவருவது இத்துறை சார்ந்த ஏனைய நிறுவனங்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி வருகின்றது.

குறிப்பாக மேற்குறித்த சிறப்புப் பிரிவுகள் பனை அபிவிருத்திச் சபையில் இருநத போதும் இவை அனைத்தும் செயலிழந்து உறங்கும் நிலையில் கிடக்கின்றன. காரணம் சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்கள் சபையினுடைய செயற்பாட்டில் மன முடைந்து வேறு பதவிகளுக்குச் சென்றுள்ள நிலமையும் பனை வளத்தின் பயனைப்பற்றித் தெரியாத பலர் சபையின பொறுப்பான கதிரைகளை அலங்கரிக்கும நிலையும் பனை வள அபிவிருத்தியைக் குன்றச் செய்துள்ளன.

ஸ்ரீ லங்கா அரசின் அமைச்சின் கீழ் உள்ள இச்சபை பனைவளத்தை தமது ஜீவனோபாயமாகக் கொண்ட 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழீழ பிரதேசத்தில் வாழுகின்ற பயனாளிகளைப் பற்றி எள்ளளவும் சிந்திக்காது இருப்பது தமிழர் தாயகத்தில் ஒரு பனை அபிவிருத்திச் சபையை உருவாக்கத் தூண்டும் நடவடிக்கையாகவே அமைகின்றது.

பனை அபிவிருத்திச் சபைக்கென ஒதுக்கப்படும் அரச நிதி வெறுமனே பணியாளர் சம்பளத்துடன் முடிவடைகின்ற நிலை கடந்த பல ஆண்டுகளாக உள்ளமை கவலைக்குரியதே. ஸ்ரீலங்கா அரசு தமிழர்களின் ஒரேஒரு சபையாக உள்ள இந்தப் பனை அபிவிருத்திச் சபையைத் திட்டமிட்டுப் புறக்கணிப்பதன் மூலம் தமிழர் தாயக அபிவிருத்தியைப் புறக்கணிக்கும் நடவடிக்கையாக அவதானிக்க முடிகிறது. இந்த நடவடிக்கைக்குத் தமிழ் அமைச்சொன்று துணை போவதை தமிழர்களுக்கான துரோகமிழைக்கும் செயலாகவே அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான நிலை தொடர்ந்து நடைபெறுமேயானால் இச்சபையானது தமிழ் பேசும் மக்களிடமிருந்து அந்நியப்படும். அவ்வாறு அந்நியப்படுத்தும் நோக்கமாகவே தற்போது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் இருந்து உத்தியோகத்தர்கள் கொழும்பிற்கு மாற்றப்படுவதும் தலைமைச் செயலகம் கொழும்பில் அமையவுள்ளதுமான செய்திகள் இவை. பனம் தொழில்சார் மக்கள் மனங்களில் பனை அபிவிருதிச் சபை மீது வெறுப்பை ஏற்படுத்தியுள்ளன. பனை அபிவிருத்திச்சபை இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வது தமிழ்த் தேசிய விருட்சம் ஒன்றின் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்காத நிலையையும் தமிழர் தயாக நிலப்பரப்பின் அபிவிருத்தியினையும் விரும்பாத போக்கையே காட்டி நிற்கும்.

எனவே, பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகம் தமிழர் தாயக நிலப்பரப்பிலேயே இயங்கவேண்டும். இதன் மூலம் தமிழர் தாயகத்தில் பரந்து நிறைந்திருக்கின்ற பனை வளமும் அதனைப் பயன்படுத்தும் மக்களும் அபிவிருத்தியை அடையக்கூடிய செயற்பாடுகள், இச்சபையால் மேற்கொள்ளப்படலவேண்டும். இந்த நிலையில் இருந்து பனை அபிவிருத்திச் சபை மாறுபட்டு கொழும்பில் தலைமை அலுவலகத்தை வைத்துச் செயற்பட முயலுமேயானால் தமிழர் தாயகத்தில் தனியான பனை அபிவிருத்திக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கும் நிறுவனம் ஒன்று உருவாகுவது உறுதியாக்கப்படும். இதனை பனை அபிவிருத்திச் சபையை வழி நடத்தும் அமைச்சும் பனைவள அபிவிருத்தியைப் புறக்கணித்துவரும் ஸ்ரீலங்கா அரசும் கவனத்தில் எடுக்கவேண்டும் என்று அதில் உள்ளது. (எ-6)

# தமிழரின் உரிமையை மறுக்கும் அரசின் எந்தப் பிரதிநிதிக்கும் இங்கு இடமில்லை!

### தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.2

தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் அரசின் எந்தப் பிரதிநிதிகளுக்கும் யாழ்.மண்ணில் கால் பதிக்கும் அருகதை இல்லை.

இவ்வாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வடக்கு - கிழக்கு ஆளுநரின் வருகையை ஒட்டி அவருக்கு அனுப்பியுள்ள கடித்தில் தெரிவித்துள்ளது.

ஆளுநர் அசோக ஜயவர்த்தன நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார். இவரது விஜயம் தொடர்பாக தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கடிதம ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழ் பேசும் மக்களின் ஒருமித்த குரலாக விளங்குகின்ற தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகத்தினராகிய நாம் யாழ்.குடாநாட்டிற்கு தாங்கள் வருவதைக் கடுமையாக எதிர்க்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களாகிய எமது உரிமைகள் சிங்களப் பேரினவாதத்தினால் மறுக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டபோது, அந்த உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக கடந்த இரு தசாப்தங்களுக்கு மேல் போராடி வருகின்றோம். எமது போராட்டம் ஓர் உச்சநிலைக்கு வந்த பின்னர் இன்று ஒரு சமாதானச் சூழ்நிலை உருவாகி சுமார் இரண்டரை வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் தமிழ் மக்கள் சார்பாக எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள எமது பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட எந்தவொரு கோரிக்கையையுமே சிறிலங்கா இனவாத அரசு கருத்தில் எடுக்கவில்லை.

நாம் கேட்பதெல்லாம் எமது அடிப்படை உரிமைகளையே. எமது அடிப்படை உரிமைகளைத் தரமறுக்கின்ற சிங்கள இனவாத அரசை நாம் வெறுக்கின்றோம்.

எமது மக்கள் இன்றும் அகதி முகாம்களில் சொல்லொண்ணாத் துயரில் மூழ்கியிருக்கின்றார்கள். எமது வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள் இராணுவ ஆக்கிரமிப்பு முகாம்களாகவே இருக்கின்றன. இவற்றிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி எமது மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் குடியேற அனுமதிக்குமாறு பல தடவை நாம் கோரிக்கையை விடுத்தபோதும் அரசு செவிசாய்ப்பதாக இல்லை.

அது மட்டுமன்றி எமது பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையில் அரசு பேச்சை ஆரம்பிக்கவும் தயாராக இல்லை. மாறாகத் தொடர்ந்து எம்மை அடிமைகளாகவாழ வைக்கவே நினைக்கின்றது.

இந்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் அரசின் பிரதிநிதியாகிய நீங்கள் யாழ்.குடாநாட்டிறகு வருவதை நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதை மீறி நீங்கள் குடாநாட்டிற்கு வரமுற்பட்டால் கடும் எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிடும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். நீங்கள் மட்டுமல்ல எமது உரிமைகளை மறுக்கும் அரசின் எந்தப் பிரதிநிதிகளும் எம்மண்ணில் கால்பதிக்க அருகதையற்றவர்களாகவே நாம் கருதுகின்றோம் - என்றுள்ளது. (3-6)

# பெண்கள் மீதான வன்முறைகளை தடுப்பதற்கு வடக்கில் பிரசாரம்!

யாழ்ப்பாணம்,நவ.2

பெண்களுக்கெதிராக அதிகரித்துவரும் வன்முறைகளைத் தடுக்கும் நோக்கில் வடபகுதியில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான இயக்கமும் 'ஒக்ஸ்பாம்' அமைப்பும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார், அனுராதபுரம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, கண்டி, பதுளை, மாத்தளை, மொனறாகலை, அம்பாந்தோட்டை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் இப்பிரசாரம் நடவடிக்கைகள் இடம்றெவுள்ளன.

இதன் முதற்கட்டமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கான பிரசார நடவடிக்கை எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, 'ஒக்ஸ்பாம்' திட்டத்தின் வடபகுதி இணைப்பாளர் மாட்டின் லிண்டர்ஸ், 'ஒக்ஸ்பாம்' திட்டப் பிரதிநிதி பில். எஸ் மொன்டே, யாழ் மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிலையத் தலைவர் திருமதி சறோஜா சிவசந்திரன், பெண்கள் வன்முறைகளுக்கு எதிரான அமைப்பின் யாழ். மாவட்டப் பிரதிநிதி யசோதரன், அதன் வழிகாட்டல் குழுவைச் சேர்ந்த பி.நரசிங்கன், அன்னை இல்லப் பணிப்பாளர் வண.பிதா றெஜினோல்ட் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த திருமதி சுகந்தா உட்படப் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர். (4-5)

# ஆலயத் திருட்டுக்களைத் தடுக்க முன்னேற்பாடுகள் வேண்டும்

### கோப்பாய் பொலீஸ் பொறுப்பதிகாரி அறிவுரை

ஆலயங்களில் இடம்பெறும் திருட்டுக்களைத் தவிர்ப்பதற்கான முன்னேற்பாடுகளை சம்பந்தப்பட்ட ஆலயங்களின் நிர்வாகிகள் எடுக்கவேண்டும்.

இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார் கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

இரவு நேரங்களில் ஆலயங் களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது மிக அவசியமாகும்.

குறிப்பாக மழை காலங்களில் ஆலயங்களில் விக்கிரகங்களும் வேறு பொருள்களும், திருடப்பட்டு வரும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.

தொடர்ந்தும் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாது இருக்க அனைத்து ஆலய நிர்வாகிகளும் தமது ஆலயங்களில் இரவு நேரம் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்-என்றார்.(எ-180)

**நாளை**

ஐப்பசி 18
புதன்கிழமை
(03.11.2004)
திதி: சஷ்டி
முன்னிரவு 6.23 வரை
நட்சத்திரம் : புனர்பூசம்
பின்னிரவு 2.28 வரை
[illegible]
[illegible] 12.04 - 1.34
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

அடக்கம் ஆயிரம் பொன் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகம் திரும்பினர்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மீன்பிடி ட்றோலர் ஒன்றில் வந்த (ஐந்து குழந்தைகள் உட்பட) 11 ஈழத்தமிழ் அகதிகள் தலைமன்னார் பழைய வெளிச்ச வீட்டுக்கு அண்மித்த பகுதியில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணிக்கு இந்தியாவிலிருந்து வந்த மேற்படி ட்றோலரில் பயணித்த 11 இலங்கை அகதிகளும் தலா 2,500 இந்திய ரூபா செலுத்தியே இலங்கைக்கு வந்தனர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட அகதிகள் அனைவரும் தலைமன்னார் பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் இவர்களிடமிருந்து 1,830 ரூபா இந்தியப் பணமும், இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும், வானொலி ஒன்றும் பொலீஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-க-13)

## மருத்துவமுகாம

வடக்கு - கிழக்கு புற்றுநோயாளர் உதவி மையததினால் மாதந்தோறும் நடத்தப்பட்டுவரும் பெண்களுக்கான இலவச மருத்துவமுகாம் நாளைமறுதினம் வியாழக்கிழமை இலக்கம் 69, பழம் றோட், கந்தர்மடத்திலுள்ள புற்றுநோயாளர் மையத்தில் காலை 9 மணி தொடககம் பிற்பகல் 3மணிவரை நடைபெறவுள்ளது.

(10-203)

## நடுகை ஆரம்பம்

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தமது காணிகளில் நாற்று நடுகையை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது நல்ல மழைபெய்து வயற்காணிகளில் வெள்ளம் நிற்பதால் நாற்று நடுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை நாற்று நடுவதற்கு பெண் தொழிலாளர்களுக்கு இப்பகுதியில் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், உரிய காலத்தில் நாற்று நடுகையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் பலர் சிரமப்படுவதை அவதானிக்க முடிகிறது. (எ-135)


அருணலு

பெறுமதிமிக்க பரிசில்களை
5ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும்
செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம், 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால், உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு - ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SSCB INTERNATIONAL






(C/38611)

பண்டிகைக்கால அதிரடி SALE
கண்ணைக் கவரும் புத்தம் புதிய சாறிவகைகள், ஏராளமான ஆண், பெண் சிறுவர், சிறுமியர்களுக்கான புதியதோர் உலகம்!
ஒருமுறை வந்து பாருங்கள்!
ரூபா 3000/= இற்கு மேலாகக் கொள்வனவு செய்கின்ற ஆண்களுக்கு ஓர் அழகிய சேட் பெண்களுக்கு ஓர் அழகிய பிளவுஸ் } பரிசு!



யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம்
30 ஆம் ஆண்டு நிறைவு

மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி

இன்று இறுதி நாள்

ஊடக அனுசரணை உதயன்
அனுசரணை SAAMSTECH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை
# அதிபர் திரு. அப்பாப்பிள்ளை நடராசா அவர்களின்
# சேவைநலன் பாராட்டுச் சிறப்புமலர் 02-11-2004

## பண்போடு வாழியவே!

யா/சோதிவேம்படி வித்தியாசாலை இன்று தலைசிறந்த ஒரு பாடசாலையாக மிளிர்கிறது. புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகிறது. இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காகப் பல வருடங்கள் அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெறும் திரு.அ.நடராசா அவர்கள் பண்போடு வாழ்ந்தவர். இவரது காலத்தில் பாடசாலை அபரிமிதமான வளர்ச்சியை அடைந்தது எனலாம். மருதடி விநாயகர் மீது அளப்பெரும் பக்திகொண்ட இந்த அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களும் நீடூழி வாழ வாழ்த்துவதோடு, ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் தொடர்ந்தும் சமூகத்துக்குச் சேவை செய்ய மனவலிமையும் உடல் வலிமையும் பெருக மருதடியானைப் பிரார்த்தனை செய்து ஆசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயகுமாரக்குருக்கள்
மருதடி விநாயகர் திருக்கோயில், மானிப்பாய்.

## அமைதியும் அடக்கமும் கொண்ட அதிபர்

அன்பின் உறைவிடமாய், பண்பினில் சிகரமாய், அறிவு, ஆற்றலில் இதயமாய், கடமையில் பற்றுறுதியாக... பல்லாண்டு காலம் ஆசிரியராகவும், அதிபராகவும் நற்சேவை புரிந்து அகவை அறுபதில் இளைப்பாறிச் செல்கின்ற திரு.அ.நடராசா அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துவதில் பெருமகிழ்வுறுகின்றேன். எமது பிரதேச மாணவர்களின் கல்வியில் தொய்வுநிலை ஏற்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில் சகல வகையான கல்விமுறைகளுக்கும் அடித்தளமாக விளங்குகின்ற ஆரம்பக் கல்வித் துறையில் நீண்டகாலம் பணியாற்றியதன் விளைவாகப் பெற்றுக் கொண்ட அனுபவமுதிர்ச்சியின் பெறுமானங்களை யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற சகல மாணவர்களிடமும் செறிவுறச் செய்வதன் அடையாளங்களைக் கடந்த பல வருடகாலமாக இவர்கள் பெற்றுக்கொண்ட புலமைப்பரிசில் பெறுபேறுகளும், வேற்றுப் பாடசாலைகளில் இடைநிலை, உயர்நிலைக்கல்வியில் ஆற்றுகின்ற சாதனைகளும் சான்றுபகர்கின்றன. அமைதியும், அடக்கசுபாவமும் கொண்ட இவர், சிறந்த உறவுகளை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர்களிடமும் பேணி வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தை நல்கி மகிழ்ச்சிகரமான சூழலில் அனைத்து மாணவர்களும் புதிய கல்விச் சீர்த்திருத்தத்திற்கமைய உரிய தேர்ச்சி நிலைகளைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டார். இவரின் எதிர்கால நல்வாழ்வு சிறப்புற அமைவதற்கு இறைவனின் பெயரால் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சு.சுந்தரசிவம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி நிர்வாகம்.

## அரும்பணியாற்றிய அதிபர்



ஆசிரியராக, அதிபராக மிக நீண்டகாலம் கல்வி உலகிற்குத் தன்னை அர்ப்பணித்துக் கல்விச் சமூகத்தின் ஏகோபித்த நல்லெண்ணத்தைப் பெற்று அரும்பணியாற்றிய உயர்திரு.நடராசா அவர்கள் ஓய்வுபெறும் இன்றையதினம், அவர் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். வலிகாமம் கல்வி வலயத்தில் பௌதிக வளங்கள் மிகக்குறைவான பாடசாலையாக விளங்கும் யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம் கடந்த 15 ஆண்டுகளாக யாழ். மாவட்டத்தில் யாவரும் அறிந்த பாடசாலையாக விளங்க வைத்த பெருமை அதிபர் திரு.நடராசா அவர்களையே சாரும்.

கடந்த 15 ஆண்டுகளாக எந்த ஒரு வருடத்திலும் குறைவில்லாமல் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைத் தனதாக்கி வரும் இப்பாடசாலை 2004 இல் நடைபெற்ற பரீட்சையிலும் 12 மாணவர்களைச் சித்தியடையச் செய்து வலிகாமம் கல்வி வலயத்தில் 30% பெறுபேறுகளைக் கொண்ட முதலாவது பாடசாலையாக விளங்க வைத்த பெருமை தற்போதைய அதிபரையும் அவரது வழிகாட்டலில் சேவையாற்றும் ஆசிரியர்களையுமே சாரும். திரு.நடராசா அவர்கள், பாடசாலைச் சமூகத்தின் ஏகோபித்த ஒத்துழைப்போடும் கல்வி அதிகாரிகளின் நிலையான நன்மதிப்போடும் சோதி வேம்படி வித்தியாலயத்தை உயர்நிலைக்குக் கொண்டுவந்திருக்கின்றார். புலமைப் பரிசில் பரீட்சையில் பெறுபேறுகளுக்கு மேலாக அங்கு கல்விபயிலும் சகல மாணவர்களையும் இடைநிலைக் கல்வியைக் கற்பதற்குரிய உயர் தேர்ச்சி மட்டத்தைக் கொண்டவர்களாக மாற்றுவதில் பெருவெற்றியைக் கண்டிருப்பதோடு, வருடாவருடம் பல்வேறு இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாகாண மட்டம் வரையும் மாணவர்களைப் போட்டிக்கு அனுப்பும் திறமைகளையும் உருவாக்கிப் பெருமை சேர்த்தார். பாடசாலைச் சமூகத்தாலும் கல்விப் புலத்தில் உள்ளவர்களாலும் என்றும் மறக்கமுடியாத அரும்பணி ஆற்றி ஓய்வுபெறும் அதிபர் அவர்கள் தொடர்ந்து சமூகப்பணி ஆற்றி ஏற்கனவே உயர்நிலை பெற்றுவிட்ட அவர் குடும்பம் மேலும் பல சிறப்புகள் பெற்று சாந்தி சமாதானத்துடன் வாழ வாழ்த்துகின்றேன்.

க.தனபாலசிங்கம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சண்டிலிப்பாய்.



"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் - மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு".



## அதிபர்
## திரு.அப்பாப்பிள்ளை நடராசா
### (கணிதப் பயிற்சி, அதிபர் தரம் 2-I)

**வாழ்க்கைக் குறிப்பு:**

பிறப்பு : 03.11.1944 சங்கானை
தந்தை : திரு.அ.அப்பாப்பிள்ளை
தாய் : திருமதி அ.நாகம்மா
கல்வி: 1.யா/ஸ்தான அ.மி.த.க. பாடசாலை
2. யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, சித்தன்கேணி.
3. யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**ஆசிரியர் சேவை**

1964-1966 யா/ஸ்தான அ.மி.த.க/பாடசாலை, சங்கானை.
1966-1967 யா/பிளவத்தை அ.மி.த.க.பாடசாலை, சித்தன்கேணி.
1967-1968 பலாலி ஆசிரியர் கலாசாலை.
1969-1973 களு./சீனன் கோட்டை முஸ்லிம் ம.வி.பேருவளை.
1974-1974 அ/கனவில் பொல முஸ்லிம் ம.வி.கெக்கிராவ.
1975-1982 யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய்.
1982-1993 யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்
1993-02.11.04 யா/சோதி வேம்படி வித்தியாசாலை.

மொத்த சேவைக்காலம் 40 வருடம் 3 மாதங்களாகும்.

**1993 தொடக்கம் 2004 வரை பெறுபேறுகள்**

**புலமைப்பரிசில் பரீட்சை**
1.சித்தியடைந்த மாணவர் 74
2.உயர் எண்ணிக்கை
கோட்டம் 3முறை
உயர் நூற்றுவீதம் வலயம் 1 முறை
உயர் புள்ளி கோட்டம் 4 முறை
உயர் புள்ளி வலயம் 2 முறை
உயர் புள்ளி (2ஆம் இடம்)
மாவட்டம் 1முறை

**தமிழ்த்தினம்**
1.கோட்டம் 45 இடங்கள்
2.வலயம் 16 இடங்கள்
3.மாவட்டம் 5 இடங்கள்
4.மாகாணம் 1 இடம்

**திருக்குறள் மனனம்**
1.மாவட்டம் (1995) 1இடம்
2.வலயம் 8 இடங்கள்
3.கோட்டம் 13இடங்கள்

**ஆங்கில தினம்**
1.கோட்டம் 53 இடங்கள்
2.வலயம் 16 இடங்கள்
3.மாவட்டம் 3 இடங்கள்
4.மாகாணம் 2 இடங்கள்

**பண்ணிசைப் போட்டி**
மாவட்டம் 2 இடம்

**மாணவர் அறிவுத்திறன் மனபபாங்கு விருத்திக்கான ஏனைய நிகழ்வுகள் ஏற்பாடுகள்**
1.பரிசளிப்பு விழா வருடந் தோறும்
2.இல்ல மெய்வல்லுநர் போட்டி வருடந்தோறும்
3.நவராத்திரி விழா
4.நூல்நிலையப் பயன்பாடு
5.விசேட புலமைப்பரிசில் வகுப்புகள், பயிற்சிகள்
6.விசேட பரிகாரக் கற்பித்தல் வகுப்புகள்
7.கல்விச்சுற்றுலாக்கள்
8.சமயம், பிரார்த்தனைகள், ஆலய வழிபாடு
9.விசேட ஆங்கில வகுப்புகள்
10.சுத்தம், விழுமியங்கள் பேணல்
11.சாரணியம்
12.மாணவர் மன்றங்கள்
13.உடற்பயிற்சி

## நல்லதிபர் நடராசா பற்றி...



எமது வலிகாம வலயத்தின் அதிபர்களுள் மானிப்பாய் சோதிவேம்படி அதிபர் திரு.நடராசா அவர்கள் குறைகாணமுடியாத முழுமையான மனிதர் என்று துணிந்து கூறுவேன். பண்பாளர், பணிவு மிக்கவர், சிறந்த பணியாளர், இறைவனுக்குப் பயந்து தொண்டாற்றுபவர். அவரது காலம் சோதிவேம்படியின் பொற்காலம். தனது குழந்தைகள் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பிடம் பெறவேண்டும் என்ற அதேநேரத்தில் சகல பிள்ளைகளும் எழுத, வாசிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற இலட்சியத்தில் வெற்றி கொண்டவர். அதிபர்கள் என்றால் என்ன, ஆசிரியர்கள் என்றால் என்ன, சாதாரண மனிதர்கள் என்றால் என்ன, சகலருடனும் பண்புடனும் பரிவுடனும் பழகுபவர். நடுநிலையும் சமநிலையும் தவறாத உத்தமர். தோற்றத்தில் மட்டுமல்ல, உள்ளத்தினாலும் உயர்ந்துவிட்ட, உயர்ந்த மனிதர். அவரது வாழ்வில் ஒருவராவது அவரால் துன்பப்பட்டிருக்கமுடியாது. வலிகாமம் வலயம் செய்த தவத்தின் பயன் மானிப்பாய் சோதிவேம்படிக்கு இவ்வாறானதோர் அதிபர் கிடைத்தது என்று பெருமையுடன் கூறுகின்றேன். என் இதயத்தில் நங்கா இடம்பெற்ற அதிபர். அவரது ஓய்வுக்காலம் சிறப்புற அமையும் எனத் துணிந்து சொல்வேன். எனது பெருமை மிக்க அன்புமிக்க அதிபரை அவர் எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

திருமதி.றெ.இருதயநாதன்
வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.

## உந்து சக்தியாகத் திகழ்ந்தவர்

யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை அதிபர் திரு.அ.நடராசா அவர்கள் மணிவிழாக்காண்பதையிட்டு இச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

*"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணியல்ல மற்றுப் பிற"*

என்ற குறளுக்கு இலக்கணமாய் வாழ்ந்து, தனது பாடசாலையை மிகச் சிறந்தமுறையில் வழிநடத்திச் சென்றவர் திரு.அ.நடராசா அவர்கள். கல்வி அடைவுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் இப்பாடசாலைப் பிள்ளைகள் முன்னணியில் திகழ்வதற்குப் பெரும் உந்து சக்தியாகத் தொழிற்பட்டார். அதனால், வலயமட்ட மேற்பார்வைக் குழுவின் அவதானத்தின் அடிப்படையில் இவ்வருடத்திற்குரிய நல்லதிபர்களில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டுப் பாராட்டப்பட்டார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் பகுப்பாய்வு செய்யப்பட்ட போது எமது வலயத்தில் உயர்ந்த சித்தி வீதத்தைக் கொண்ட பாடசாலையாக (30%) மானிப்பாய் சோதிசேம்படி வித்தியாசாலையே திகழ்கிறது. அந்த நிலைக்கு அதனை உயர்த்துவதில் தேவைப்படும் வலுவை ஆசிரிய குழாத்தில் இருந்து அன்புடன் பெறும் வலிமை மிகக வராக அதிபர் திகழ்ந்தார். மாணவர்களிடையே விழுமியம் சார் ஆற்றல்களை வலுப்படுத்துவதிலும் அவர் அக்கறையுடன் செயற்பட்டார் என்பதைத் திருக்குறள் மனனப்போட்டி போன்றவற்றிலும் அவர் எடுத்துக் கொண்ட அக்கறை எடுத்துக்காட்டி நிற்கும்.

மேலும் பல ஆண்டுகள் அவர் நிறைவாழ்வு வாழவேண்டும். அவரது ஓய்வுக்கால வாழ்வு எல்லாச் செல்வங்களும் நிறைந்ததாக அமைய வேண்டும் என்று வாழ்த்துவதில் பெரும் உவகை அடைகிறேன்.

திருமதி கோகிலா மகேந்திரராஜா
பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி முகாமைத்துவம்,
வலிகாமம் வலயம்.

## தன்னலங்கருதாத அதிபர்

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்க, நல்லதிபராகக் கடமையுணர்வு கொண்டவராக, கண்டிப்பானவராக, அரவணைத்து ஆறுதல்சொல்லும் அன்புள்ளம் கொண்டவராக, தன் நலன் கருதாது மாணவர்களைக் கல்வியில் மேம்படச் செய்ய அயராது உழைத்த எங்கள் அதிபர் ஒரு நல்லதிபருக்கு உதாரணமாவார். அவர் ஓய்வுபெறும் இந்நாளில் அவரது மனைவி, பிள்ளைகளுடன் எல்லா நலன்களும்பெற்று சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல அம்மனை வேண்டுகிறோம்.

வாழ்க நிரந்தரம் வாழ்க எம் அதிபர்
வாழிய வாழியவே!

திருமதி கி.அஜந்தா
ஆசிரியர் நல்லுறவு மன்றத் தலைவர்.

## எமது பாடசாலையின் உயர்வுக்கு...

எமது பாடசாலைக்கு நல்லதிபராக 12 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய திரு.அ.நடராசா அவர்கள் அறுபதாவது அகவையைக் காணும் இவ்வேளையில் சிந்தை மகிழ்ந்து பாராட்டுச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன். காலத்தின் தேவைகருதி மாணவர்களுக்கான வகுப்பறைக் கற்றல், கற்பித்தலை கல்வி நிர்வாக ஆளுமையினால் ஏற்படுத்தி உச்சப் பெறுபேறுகள் வர உறுதுணையாக நின்றவர் என்றால் மிகையாகாது. அவரது காலத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 74 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். அத்துடன், இணைப்பாடவிதான செயற்பாடு என்றும் பல வெற்றிகளைக் கண்டவர்.

யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை ஒளிமயமாக இன்று பிரகாசித்துக் கொண்டிருப்பதற்கு அல்லும் பகலும் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றியுள்ளார். பாடசாலையில் ஒவ்வொரு மாணவர் பற்றியும் அறிந்துகொண்டவர். வகுப்பறைக்களத்தில் தானும் இணைந்து மாணவர்களுக்குக் கணிதத்தையும் ஆங்கிலக் கல்வியையும் போதித்துள்ளார். மாணவர்களுக்கு இறை பக்தியையும் நல்ல ஒழுக்க விழுமியங்களையும் ஊட்டுவதில் அதிக அக்கறை கொண்டவர். இவ்வாறு எமது பாடசாலையின் உயர்வுக்கு அயராது உழைத்த அதிபர் இவர்.

இறை பக்தியும் மற்றவரிடம் அன்பாகப் பழகும் சுபாவமும் கொண்டவர். அன்பும் பண்பும் கொண்ட அதிபரும் அவரது குடும்பத்த வரும் பல்லாண்டு காலம் மகிழ்வும் ஆரோக்கியமும் பெற்று வாழ எல்லாம்வல்ல மானிப்பாய் மருதடி விநாயகரின் பாதமலர்களை வணங்கி வாழ்த்துகின்றேன்.

சி.ஸ்ரீகுமாரன்
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சபை.

(38168)(34-11-44)

## எடுத்துக்காட்டான அதிபர்

வலிகாமம் கல்வி வலயத்தின் புகழ்பூத்த ஓர் ஆரம்பப் பாடசாலையாக யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தினை வளர்த்தெடுத்த பெருமைக்குரிய அதிபரே திருவாளர் அ.நடராசா அவர்கள். இவரை யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் கணிதம் கற்பிக்கும் ஓர் ஆசிரியராக நான் பார்த்திருக்கின்றேன். அக்காலத்தில் நல்ல கற்பித்தல் நுட்பங்களையும், கற்பித்தல் முறைகளையும் கொண்டு கணித எண்ணக்கருக்களை எளியமுறையில் மாணவர் விளங்கக்கூடியவாறு கற்பித்து நான் ஒரு நல்ல ஆசான் என்பதை நிறுவியவர். இவருடைய ஆசிரியப் பணி மிகவும் சிறப்பானது. இவர், கணிதப் புலமையும், அறிவாற்றலும், சிறந்த ஆசிரியத்துவமும், அபிவிருத்தி முகாமைத்துவத்திறனும் கொண்டவராக விளங்கினார். இவர் அதிபராக இருந்த காலத்திலும் கூட, ஆசிரியப் பணியைக் கைவிடவில்லை. தனது மாணவர்கள் ஒவ்வொருவரையும் அறிந்தவராக இருந்தார். ஆசிரியர்களுடன் தானும் இணைந்து கலவியைத் திட்டமிட்டு வழங்கினார். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக இருந்தார். இதன்பேறாக பாடசாலை நல்லதொரு குடும்பமாகத் திகழ்ந்தது. பாடசாலையில் மாணவர்களுக்கு அறிவாற்றல் விருத்தியுடன், இயக்கத்திறன் விருத்தி, மனப்பாங்கு விருத்தி, சமூகவிருத்தி போன்றவையும் ஒருங்கே கிடைக்கச்செய்வதில் அக்கறை செலுத்தினார். இதன் விளைவாக மாணவர்களின் கல்வி அடைவு குறிப்பாகப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வருடந்தோறும் உயர்ந்து வந்ததையும், கோட்ட, வலய, மாவட்ட மட்டத்தில் நடைபெறும் பல்வேறு போட்டிகளிலும் மாணவர் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியமையும் யாவரும் அறிந்த ஒன்றே. இவ்வாறான சிறந்தசேவையை ஆற்றிய 'நடா' அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன், அவர் நீண்டகாலம் குடும்பத்துடன் இனிதே வாழ்ந்து, நற்சேவைகள் பலபுரிந்து சிறப்புறவேண்டுமென எல்லாம்வல்ல மருதடி விநாயகன் தாழ்பணிந்து வேண்டுகின்றேன்.

சி.மாதவகுமாரன்,
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி),
வலிகாமம்.

நன்றி வணக்கம்

வாழ்த்துவோர்: வே.குலாநந்தராசா, பொ.சிவபாலன், க.செல்வேந்திரன், தி.உமைபாலன், ம.தயாளன், த.தர்மறூபன், ந.ஸ்ரீலிங்கம், சு.சிவகுமாரன், ந.மனோகரன், ஹெ.ஜெயகுலராசா, செ.பரமானந்தம், கு.அருந்தவநாதன், க.நடேசு, கா.விஜயநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# தசம தின லஷ்சார்சனை

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில்
இன்று (02-11-04) செவ்வாய்க்கிழமைமுதல்
11-11-04 வியாழக்கிழமை தீபாவளி வரை
மாலை 6 மணி முதல் 8மணி வரை நடைபெறும்

*பிரதம குரு:*
பிரம்மஸ்ரீ தாவ. வாசுதேவக்குருக்கள்
வேதாகம பண்ணிசைச் செல்வன்
ஆலயகுரு: பிரம்மஸ்ரீ வா. ஜெய்வஸ்தீதாங்க சர்மா

(38200) (16-17-32) - நிர்வாகம்.



# ஊழியர் தேவை

எமது நிறுவனத்தின் களஞ்சிய சாலையில் இருந்து பொருள்களை எடுத்துவந்து சரிபார்த்து, சிட்டைப் படி பொதிசெய்து வழங்குவதற்கு முன் அனுபவத்துடன் திறமையுள்ள ஆண் பணியாளர்கள் தேவை.

மாதாந்தச் சம்பளமாக 7000/= ரூபாவும் மேலதிகமான விசேட படிகளும் வழங்கப்படும். சுயவிவரக் கோவை மற்றும் உறுதிப்படுத்தும் சான்றிதழுடன் நேரில் வரவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
**288, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-38516) ☎ 222 2567


# ஆயுள் வேத மருந்துகள் வந்துசேர்ந்தன

வலி.மேற்குப் பிரதேச சபையின்கீழ் சுழிபுரத்தில் இயங்கும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் வந்துள்ளன. நோயாளர்கள் விசேடமாக வாதரோகம், கரப்பான், தொய்வு போன்றவற்றிற்கும் குழந்தைகளுக்கான கிரந்தி முட்டு, கரப்பான் போன்றவற்றிற்கும் சிகிச்சைபெறலாம் என்று வைதத்திய பொறுப்பதிகாரி எஸ். பரமசிவம்பிள்ளை அறிவித்துள்ளார். (4-28)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா உருத்திராதேவி

(மகேஸ்வரி)



புங்குடுதீவு ஆறாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 36/17, பிரம்படி லேன், கொக்குவிலை வதிவிடமாகக் கொண்ட திருமதி செல்லையா உருத்திராதேவி அவர்கள் 29.10.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அம்பலவாணர் செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனம்-சிவக்கொழுந்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற அம்பலவாணர்-மருதநாயகம் தம்பதிகளின் மருமகளும் உதயகுமார் (பிரான்ஸ்), உதயவாணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உதயராணி (கப்டன் பூமகள்) மற்றும் உதயரஜனி (ஜேர்மனி), உதயரமா (ஜேர்மனி), சசிகலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாமினி, சிவராசலிங்கம், கமலானந்தன், பாக்கியநாதன்,ஜெயலிங்கம் காயித்திரி ஆகியோரின் அன்பு மாமியாரும் தவமணிதேவியின் (கனடா) அன்புச் சகோதரியும் ஆறுமுகம் (கனடா), காலஞ்சென்ற திருமேனிப்பிள்ளை நமசிவாயம் மற்றும் ஆறுமுகம் செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் தவக்குமார் (கனடா), தவகரன் (கனடா) ஆகியோரின் சிறியதாயாரும் கஜாஜினி, சோபசாலினி, சகானா, அர்ஜீனா, சர்மிளா, சிந்துசன், டினோசா, தனோஜன், சாரியா, கெவின், மாதுஜி, டிலான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*36/17, பிரம்படி லேன்,*
*கொக்குவில்.* (38195)(16-17-32)

தகவல்:
அ.செல்லையா (கணவர்)

# நினைவழியா நினைவுகளில் 4 ஆம் ஆண்டு



## கடற்புலி மேஜர் நிலவன்

(சிவபாலசிங்கம் வேலவமூர்த்தி)

தாயக மண்ணில்
23-03-1980

தாயக வேள்வியில்
02-11-2000

கடற்படையினருடன் 02.11.2000 அன்று முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரசாவைத் தழுவிக்கொண்ட மேஜர் நிலவன் அவர்களது 4ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம். இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தாயக வேள்விதனில்
தம்மை ஆகுதி யாக்கிய
அண்ணனின் சேனையில்
ஆயிரத்தில் நீ யொருவன்
முல்லைத் தீவதனில் – நீ
மூச்சிழந்து போனகதை
முடியாத தொடர் கதையாய்
முதுநிலம் போற்றி விடும்!

சிவபாலசிங்கம் குடும்பத்தினர்.(G.S)

*ஆலடி ஒழுங்கை,*
*பொலிகண்டி, வல்வெட்டித்துறை.*

(38144)(39-16-17-32)

# வவுனியாவில் கொப்பேகடுவவின் சிலைக்குக் காவல்!

வவுனியா நகரில் உள்ள மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் சிலைக்குப் பொலீஸாரும் படையினரும் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

இந்தச் சிலையைத் தகர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என்று தென்னிலங்கை சிங்கள வார இதழ் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

இதுதொடர்பாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறையினரிடம் கேட்டபோது -

இறந்த ஒரு மனிதனின் உருவச் சிலையை உடைக்கும் அளவுக்கு விடுதலைப் புலிகள் மோசமானவர்கள் அல்லர். சமாதானத்துக்கு எதிரானவர்களும் அல்லர். விடுதலைப் புலிகள் மீது இவ்வாறான அவதூறான பொய்களைப் பரப்புவது கவலையளிக்கிறது [illegible]

# 11ஆம் ஆண்டு நிறைவு நாள் ...................நினைவஞ்சலி



கரணவாயைச் சேர்ந்த திருமதி

## சிவமணி(பேபி) தருமலிங்கம்

திதி: 2004.10.30

மலர்வு
29.08.1950

உதிர்வு
02.11.1993

ஆண்டோர் தசாப்தம் ஆயினும் நின்னழகு
[illegible] ஆங்கீங்கு எலாம் கண்டு அகமெல்லாம்
[illegible]கிறமே. மீண்டுமொரு புனர்ஜென்மம்
எடுத்திங்கு எமதுயிரை விடுவிக்க வேண்டுமம்மா
விரைந்துவர விரும்பு அம்மா.

தங்கள் பிரிவையெண்ணிக் கலங்கி நிற்கும்:

கணவர் : தருமலிங்கம் (சுவிஸ்),
பிள்ளைகள் : சுதாகரன் (லண்டன்), சுகந்தினி, சுஜீவா, சுபரேகா, சரவணபவன் (சுவிஸ்),
மருமக்கள் : குணசீலன், சிவநேசன், பகீதரன் (சுவிஸ்) சர்வலோகநாயகி (லண்டன்),
பேரப்பிள்ளைகள்: ரோஜினி, அஸ்ருதா, திசானி, சுவீயா, ஆருஜன் (சுவிஸ்), சந்தோஷ் (லண்டன்)
மாமி :இரத்தினம் – தஞ்சம்மா (இலங்கை)
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்

தகவல்: தருமலிங்கம் (சுவிஸ்).

(23167)(39-16-17-32) தொ.பே: 0044 6160238000

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2004 இல் சித்தியடைந்த மாணவர்கள்.



பு.பிரியங்கா
162



சி.திவிஜன்
158



அ.திருமருகன்
157



பே.நிரோசன்
156



ச.பிரியந்தினி
155



செ.தர்மிகா
146



ச.அனுலக்ஷன்
144



மு.வினோஜன்
128



இ.மேகலா
126



இ.ரமேசன்
125



ர.மிருஷானி
125



க.சேசுஜா
124

### தமிழ்த் தினப் போட்டியில் வெற்றியீட்டியவர்கள்

அ.திருமருகன் - தரம் 5 பேச்சு - வ.ம 3ஆம் இடம், ச.பிரியந்தினி - தரம் 5 பாவோதல் கோ.ம 2 ஆம் இடம், பு.பிரியங்கா - தரம் 5 வாசிப்பு - கோ.ம.2ஆம் இடம்

### ஆங்கிலதினப் போட்டியில் வெற்றியீட்டியோர்

சி.கபிலன் - தரம் 3 உறுப்பெழுத்து - கோ.ம 3 ஆம் இடம், ந.யனார்த்தன் - தரம் 3 பாவோதல் - கோ.ம 3 ஆம் இடம், ஜெ.மதுசனா - தரம் 4 பாவோதல் - கோ.ம 3 ஆம் இடம், ந.சஸ்மிதா - தரம் 5 உறுப்பெழுத்து - கோ.ம 3 ஆம் இடம், ச.பிரியந்தினி - தரம் 5 பாவோதல் - கோ.ம 2 ஆம் இடம்.

### திருக்குறள் மனனம்

பு.பிரியங்கா - வலயமட்டம் 3ஆம் இடம், க.சேசுஜா - கோ.ம 2ஆம் இடம்.

### வாய்ப்பாடு மனனம்

த.கஜேன் - கோ.ம 1ஆம் இடம்.

ஆகியோரையும் இவர்களை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் இந்த வெற்றிகளுக்கெல்லாம் தோன்றாத் துணையாய் நிற்கும் மானிப்பாய் மருதடி விநாயகரின் பாதமலர்களைப் பணிந்து, பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(38166)(39-16-17-32) - பெற்றோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004

# தமிழ்மொழியும் இலக்கியமும் I, II

உதயன்
ஜி.சீ.ஈ. (சா)தரம்
மாதிரிப் பரீட்சைகள்
இல. 15

ஆசிரியர்: க.ஈஸ்வரன்

பகுதி I    நேரம்: ஒருமணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

**1-40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து உமக்கெனத் தரப்பட்டுள்ள விடைத்தாளில் புள்ளடி (X) இடுக.**

**★ பினவருவனவற்றில் தடித்த எழுத்திற்காணப்படும் சொல்பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிக.**

1) மொழியின் அக்ஷரங்களுக்குக் கூட லக்ஷணமுண்டு. இதில் லக்ஷணம் என்பதன் தமிழ்ப்பதம் யாது?
   i) இலக்கியம் ii) அழகு iii) இலக்கணம் iv) நாகரிகம்
2) "தாமரை விளக்கம் தாங்கக் கொண்டல்கள முழவின் ஏங்க..." என்பதில் கொண்டல எனப்படுவது எது?
   i) கொன்றை மரம் ii) கடலலை iii) முகிற்கணம் iv) பெண்களின் குடுமி
3) Action Faim என்ற நிறுவனம் Field Work (ஃபீல் வேக்கில்) இல் ஈடுபடுகின்றது. Field Work என்பதன் தமிழ்வடிவம் எது?
   i) பணிக்கொடை ii) பதிவஞ்சல் iii) மின்னஞ்சல் iv) களப்பணி
4) ஆதாரம் அற்றோர்க்கு உந்தன் அடியிணையே தஞ்சம் என்பதில் ஆதாரம் என்பதன் எதிர்ப்பொருள் தரும் சொல் எது?
   i) ஆசாரம் ii) நிராதாரம் iii) அனாசாரம் iv) நிராசாரம்
5) ஓரவஞ்சனையுடன் செயற்பட்ட கண்ணனைக் கண்டு சுதன் கவலையடைந்தான். ஓரவஞ்சனை என்பதன் எதிர்க்கருத்துச்சொல் எது?
   i) நயவஞ்சனை ii) அடக்கம் iii) நடுவுநிலைமை iv) அன்புடைமை

**★பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.**

6) நூலாசிரியன் தனது தந்தைக்குச் ----------தனது நூலைப் படைத்தான்.
   i) சமற்பணமாக ii) சமர்ப்பனமாக iii) சமர்ப்பணமாக iv) சமற்பனமாக
7) கணவனை இழந்த பெண் --------நோன்பு நோற்றுவந்தாள்.
   i) கைம்மை ii) கைமை iii) கைந்மை iv) கைதவம்
8) எழுமையுந் தொடர்ந்து வரக்கூடிய அன்பு---------எனப்படும்
   i) உளுவலன்பு ii) உழுவலன்பு iii) உளுவளன்பு iv) உழுவளன்பு
9) தயவு-------இன்றிக் கொன்றுகுவித்தல் வீரனுக்கு அழகல்ல.
   i) தாச்சனியம் ii) தாட்சனியம் iii) தாட்சணியம் iv) தாச்சணியம்
10) அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட -------நிதியமைச்சர் முன்வைப்பார்.
   i) முன்மொளிவு ii) முன்மொழிவு iii) முண்மொழிவு iv) முண்மொலிவு

**★ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

11) கீரி, அணில் என்பனவற்றின் இளமைப்பெயர் பிள்ளை என்பதுபோல குரங்கு, பூனை என்பனவற்றின் இளமைப்பெயர் யாது?
   i) குருளை ii) பறள் iii) கன்று iv) குஞ்சு
12) ஒருபொருள் பற்றிக் கேட்போர் மகிழுமாறு உயர்த்திக் கூறுவது
   i) உவமை ii) ஏகபோகம் iii) ஊதாரி iv) உயர்வுநவிற்சி
13) சபை, பொதுவில், மன்றம் என்ற பன்மொழிக்கான ஒருமொழி பின்வருவனவற்றுள் எது?
   i) ஆகாயம் ii) கடல் iii) ஆபரணம் iv) அம்பலம்
14) பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல், பகுத்துணர்தல் என்பன
   i) ஆறுகுணம் ii) ஆறுபகை iii) ஆறுபருவம் iv) ஆறறிவு
15) 'பிறன் ஒருவனது குணாதிசயங்களை நாமும் பின்பற்றினால் அதனால் தீமையே விளையும் எனும் பொருளை மறைமுகமாக உணர்த்தும் பழமொழி எது?
   i) பேச்சுப் பல்லக்குத் தம்பி கால்நடை ii) பழகப்பழகப் பாலும் புளிக்கும்
   iii) புலியைப் பார்த்துப் பூனை குறிசுட்டதாம் iv) கெடுகுடி சொற்கேளாது
16) மாறுபட்ட பொருள் குறிக்கும் வகையில் அமைந்த இணைமொழி எது?
   i) கட்டுக்காவல் ii) கல்விகேள்வி iii) மேலும்கீழும் iv) துணிமணி
17) வெற்றிபெற முனைந்து நிற்றல் என்ற பொருளை உணர்த்தும் மரபுத்தொடர் யாது?
   i) தலைகீழாய் நிற்றல் ii) கையடித்தல் iii) கட்சிகட்டுதல் iv) ஒருகைபார்த்தல்
18) மேலோட்டமாகத் தெரியாத நுணுக்கம் என்ற பொருளில் வரும் அருஞ்சொல் யாது?
   i) சஞ்சீவி ii) இங்கிதம் iii) சூக்குமம் iv) சுரண்டல்
19) ஆரியத்துக்குரிய சிறப்பெழுத்துகள் தமிழ் எழுத்துகளாக விகாரப்பட்டுத் தமிழில் வழங்கும் வடசொல் எது?
   i) குங்குமம் ii) தற்சமம் iii) தற்பவம் iv) மந்திரம்
20) "ஓடும் புளியம்பழமும் போல" எனும் உவமைக்குப் பொருத்தமான பிறிதொரு உவமை எது?
   i) தூண்டிலில் அகப்பட்ட மீன்போல ii) நகமும் தசையும் போல
   iii) தாமரை இலைத் தண்ணீர் போல iv) திரிசங்கு சுவர்க்கம் போல

**★ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்க.**

21) "இந்தப் பேனாவை அநேக நாள்களாகப் பாவிக்கிறேன்" என்பதன் திருந்திய வடிவம் எது?
   i) இது பேனாவை அநேக நாள்களாகப் பாவிக்கின்றேன்
   ii) இந்தப் பேனாவை அநேக நாள்களாக உபயோகிக்கின்றேன்.
   iii) இந்தப் பேனாக்களை அதிக நாள்களாக உபயோகிக்கின்றேன்.
   iv) அநேக நாள்களாகப் பாவிக்கின்றேன் இந்தப் பேனாவை
22) "கள்ளை உண்ணற்க" என்பது எவ்வகை வாக்கியம்
   i) கூற்று ii) ஏவல் iii) வியங்கோள் iv) கலப்பு
23) பகுபதவுறுப்புக்கள் ஆறும் கொண்ட சொல் பின்வருவனவற்றுள் எது?
   i) படித்தனன் ii) உண்டனன் iii) வளர்ந்தனன் iv) பாடினன்
24) பின்வருவனவற்றுள் சினைப்பெயராவது எது?
   i) திங்கள் ii) நீளம் iii) தலை iv) உலகம்
25) பின்வருவனவற்றுள் இருதிணைப் படர்க்கைப் பொதுப்பெயராக அமைவது எது?
   i) சோம்பேறி ii) பெண் iii) எல்லாம் iv) கடுவன்
26) பின்வருவனவற்றுள் சிலேடை அணியாக அமைந்துவருவது எது?
   i) வைகல் ii) கூற்றம் iii) பழங்கறி iv) கிரகம்
27) "வெண்பாவிற் புகழேந்தி" என்பதில் வந்த வேற்றுமைப் பொருள் எது?
   i) ஒப்பு ii) உடமை iii) இடம் iv) ஏது
28) தன்மகனை அன்பு காரணமாக என் ராசாத்தி வந்தாள் என்றால் அது
   i) எண் வழுவமைதி ii) திணை வழுவமைதி iii) இடவழுவமைதி iv) பால்வழுவமைதி
29) வினையெச்சத் தொடராக அமைந்தது எது?
   i) ஓயாது பெய்தது ii) பெய்த மழை iii) வீசிய காற்று iv) உறுதுணை
30) திகதியைத் தேதி எனக் கூறினால் அது
   i) குழூஉக்குறி ii) மங்கலம் iii) இடக்கரடக்கல் iv) மரூஉ

**★ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்க.**

31) மரக்குற்றியோ, மனிதனோ
   i) அங்கே தோன்றுகின்ற உருவம் ii) அங்கே தோன்றுகின்றவன்
   iii) அங்கே தோன்றுவது iv) அங்கே தோன்றுபவர்
32) ஒன்றோ பலவோ
   i) அங்கு நிற்கும் குதிரைகள் ii) அங்கு இருந்த குதிரைகள்
   iii) அங்கு நிற்கும் குதிரை iv) அங்கு நிற்கும் குதிரையினம்
33) நானும், நீயும், அவனும்
   i) போனேன் ii) போவோம் iii) போனார்கள் iv) போனவை
34) இராமன் வில்லை வளைத்துவிட்டு
   i) வந்தான் ii) வந்தார் iii) வந்தது iv) வந்தனன்
35) கன்று ஈன்றாலன்றிப் பசு
   i) பால்தரும் ii) பால் தருகின்றன iii) பால் தரவில்லை iv) பால் தரா

**★ பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

**காதலனைப் பிரிந்தவளின் மனம்போல ஒன்று**
**கவி பாடிப் பரிசு பெறான் மனம் போல ஒன்று**
**தீது பழி கேட்டவன் தன் மனம் போல ஒன்று**
**செய்த பிழைக் கழுங்குமவன் மனம் போல ஒன்று**
**நீதி பெறா ஏழைதுயர் மனம்போல ஒன்று**
**நிறை பழித்த கற்புடையாள் மனம்போல ஒன்று**
**காதுமழுக் காறுடையான் மனம்போல ஒன்று**
**கனலேறு மெழுநீர்கள் உண்டு கன்னி யாயில்**

36) இப்பாடலில் பயின்றுவரும் அணி எது?
   i) தற்குறிப்பேற்றம் ii) வஞ்சப்புகழ்ச்சி iii) உருவகம் iv) உவமை
37) இப்பாடலின் மையக்கருத்து
   i) காதலனைப் பிரிந்த பெண்ணின் துயரம் ii) நீதி கிடைக்காத ஏழை ஒருவனின் துயரம்
   iii) கன்னியாய் வெந்நீர் ஊற்றுகளின் வெப்பம் iv) பரிசுபெறாத கவிஞனின் துயரம்
38) இப்பாடலுக்குப் பொருந்தாத கருத்து
   i) கற்போடுஇருந்து கற்பில்லை எனப் பழித்துரைத்தல் துன்பம்
   ii) பொறாமை கொண்டவன் மனம் கொதிக்கும் iii) தான்செய்த பிழைக்காக வருந்துதல்
   iv) தீயவன் எனப் பழித்தபோது மகிழ்தல்
39) காதலன், தீது, நீதி, காது என்ற சொற்களில் பயின்றுவரும் சொல்லணி யாது?
   i) சிலேடை ii) மோனை iii) எதுகை iv) மடக்கு

**★ ஒழுங்கின்றிக் கிடக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும் அந்த வைப்பு முறையைத் தெரிவுசெய்க.**

அ) உங்கள் வளர்ச்சியினை விரும்பி அந்நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் உங்கள் பெற்றோரது கனவுகளைச் சிதைக்காதீர்!
ஆ) விழித்தெழுங்கள்! விழித்தெழுங்கள்! நாளைய உலகின் நாயகர் நீரே!...
இ) ஆனால், அப்பொறுப்பை மறந்து செயற்படுகின்றீர்!
ஈ) நாளைய உலகைக் காக்கும்பொறுப்பு உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
உ) கொடிய போதைவஸ்து எனும் அரக்கனுக்கு அடிமையாகிவிட்டீர்களே!

40) i) உ,இ,ஈ,அ,ஆ ii) ஆ,ஈ,இ,உ,அ iii) ஈ,ஆ,உ,அ,இ iv) அ,ஆ,ஈ,இ,உ (40 புள்ளிகள்)

## தமிழ்மொழியும் இலக்கியமும் II 2 மணி

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

**1) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. பொருத்தமான தலைப்பு இடுக.**

**அ)** சுவரிருந்தால் அன்றோ சித்திரம் வரையலாம். நாம் உண்ணும் உணவு உடல் நலத்திற்கு உகந்ததாக இருந்தால் வாழ்வுசிறக்கும். இக்கால உணவுவகைகளும் அவற்றினால் ஏற்படும் நன்மைதீமைகள், சுகாதார வாழ்க்கைக்கு இக்கால உணவுகள் எத்தகைய பங்களிப்பினைச் செய்கின்றன என்பவற்றை விளக்கி ஒரு விளக்கக் கட்டுரை வரைக.

**ஆ.** இன்றைய மாணவரிடையே ஆங்கிலக்கல்வி அறிவுவீழ்ச்சிப் போக்கையே காட்டிநிற்கின்றது. ஆங்கிலமொழி இன்றையவுலகில் அனைத்து அம்சங்களிலும் முதன்மைபெற்றுநிற்கின்றது. விஞ்ஞான நூல்கள் பலவும் ஆங்கிலமொழியில் காணப்படுகின்றன. கணனி, தொழில்நுட்பம் மற்றும் ஆய்வியல் முறைகளும் ஆங்கிலமொழியில் பெரிதும் வெளிவந்துள்ளதால் அவற்றில் வெகுவிரைவான முன்னேற்றத்திற்கு ஆங்கிலமொழி அவசியம் என்பதை விளக்கி உமது கருத்து வெளிப்பாடு.

**இ.** வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த குமரன் தனது தந்தையின் மரணத்தைத் தொடர்ந்து தரம் ஒன்பதில் படிப்பை நிறுத்திவிட்டு செருப்புத் தைத்தல் தொழிலில் ஈடுபடுகின்றான். சுமார் மூன்றுமாதங்களின் பின்பு அவனுக்கு ஒரு புதிய உறவு கிடைத்தது....இதன் பின் நடந்தவற்றைச் சுவைபட விளக்கும் ஒரு கற்பனைச் சிறுகதை.

**ஈ.** தற்போதைய காலத்தில் பழைய திரைப்படங்களைப் பார்ப்பதிலோ பழைய பாடல்களைச் செவிமடுப்பதிலோ எம்மவர் அதிக அக்கறை செலுத்துவதில்லை இதுபற்றி நண்பர் இருவரிடையே நடந்த உரையாடல்.

**உ.** கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் நவராத்திரி விழாவை முன்னிட்டு கலைவிழா ஒன்று ஏற்பாடு செயயபபட்டிருந்தது. கலை, நடனம், பாட்டுகள், கட்டுரை, நடிப்பு, நகைச்சுவை, சமயப்பிரசங்கம் முதலியன இடம்பெற்றன. இந்நிகழ்வுகள் மக்கள் மனதில் ஏற்படுத்திய மன எழுச்சி சம்பந்தமாக ஒரு விவரணம். (30புள்ளிகள்)

**2)** கீழேதரப்பட்டுள்ள அ,ஆ,இ,ஈ என்னும் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் சுருக்கத்தை 15-20 சொற்களில் அமையக்கூடியவாறு வேறுவேறாக எழுதுக.(சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

**அ.** செந்நெறிப் பாங்கான இலக்கியங்களின் செல்வாக்குச் செறிந்து காணப்படுவது போலவே கண்ணகி வழக்குரையில் நாட்டார் இலக்கியச் செல்வாக்கும் செறிந்து காணப்படுகின்றது. சிறப்பாக நாட்டார் பாடல் ஓசை மரபு விஞ்சிக் காணப்படுவதையும் அவதானிக்கமுடிகின்றது. சகுனம், சாத்திரம், நம்பிக்கைகள், சடங்குகள் முதலான நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் இடம்பெறுவதுடன், ஆங்காங்கே பழமொழிகளும் இடம்பெற்றுள்ளன. நாட்டுக்கூத்துக்குரிய தாளக்கட்டுகளில் அமைந்த பல பாடல்களும் இடம்பெற்றுள்ளன. வகைமாதிரியாகப் பின்வரும் பாடல்களைச் சுட்டிக்காட்டலாம்.

**ஆ** உண்மையில் வாசிப்பு மனிதனைப் பூரண மனிதனாக்கும் இதனால்தான், வாசிகசாலைகள் உதயமாகின. வாசிக்கும் மனிதர்கள் வாசிகசாலைகளை நோக்கி விரைந்தனர். அறிவை விரிவாக்கவும், அறிந்தவற்றை அறியாதவர்களுக்கு எடுத்துச்சொல்லவும், சொல்வதற்கான தகவல்களைச் சேர்ப்பதற்கும் வாசிகசாலைகள் பயன்பட்டன. அறிவின் பல்துறையைச் சேர்ந்தவர்கள் வாசித்துத் தகவல்கள் சேர்ப்பதற்காக வாசிகசாலைகளில் தகவல்கள் சேர்க்கத் தகுந்த நூல்களை வெளியே எடுத்துச்செல்லாதவாறு காப்பாற்றி, அவ்விடத்தே வாசித்தறிய வழிசெய்கின்றனர். இதிலும் விரிவாகச் சுவடிக்கூடங்கள் அமைக்கப்பட்டன.

**இ.** ஒருதாய் வயிற்றில் ஒரே கருப்பத்தில் இரட்டையாகப் பிறந்தவர்கள் இரடடையர். ஒருவர் குருடர், மறறவர் முடவர். இருவரும் புலவர்கள். குருடரின் தோளில் முடவர் ஏறிக்கொள்வார். ஏறியதும் குருடர் நடப்பார். முடவர் வழிகாட்டுவார். இருவரும் ஒருவர். ஒரு பாட்டின் ஒரு பாதியை ஒருவர் பாட, மற்றவர் மறுபாதியைப் பாடுவார். இருவரிலும் அதிட்டமுடையவர் முடவர். நடப்பதன் வருத்தம் முடவருக்குத் தெரிவதில்லை. சிலவேளைகளில், வழிவேறாயிருக்க குறுக்குவழியில் இறக்கிவிடுவார் முடவர். அந்தவழி ஏற்றமும் இறக்கமும், குண்டுங்குழியுமாய் இருக்கும். ஏற்றத்திலிருந்து இறக்கத்திற்கு ஓடாமலிருக்க முடியாமற் குருடர் ஓடும்போது, முடவருக்குப் பிரயாணம் சுகம் பேசும். குருடர் யாது செய்வார்? பாவம்!

**ஈ.** இன்று அனைத்து சமூகமுன்னேற்றங்களுக்கும் உதவக்கூடிய மனிதவளத்தை விருத்தி செய்வது கல்வித்துறையின் பொறுப்பும் கடமையும் ஆகும். இதனால்தான், மனிதவள அபிவிருத்தியில் கல்வியை முக்கியமாகவும் முதன்மையாகவும் கொண்டு சிந்திக்கும் திட்டமிடல் நடைமுறையுள்ளது. இங்கு கலவித்துறை என்று வரும்பொழுது ஆசிரியர்கள் முதன்மையான இடம் வகிக்கின்றார்கள். இவர்கள் சமூக அசைவியக்கத் தொழிற்பாடுகளின் வேகம், தன்மைப்போக்கு என்பவற்றை நிர்ணயிப்பவர்களாக உள்ளார்கள். இதுகாறுமான உலகவரலாற்று அனுபவங்கள் கூட இதனை மெய்ப்பிக்கின்றன. (20புள்ளிகள்)

**3. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இலக்கியம் என்பதற்கு நச்சினார்க்கினியர் "இலக்கணத் தாற் காரியப்படுவது" என விரைங் கூறுவர். இலக்கணம் என்பது இலக்கண நூல். இலக்கியம் என்பது இலக்கணையால் அறியப்படும் பொருளுடையது என்று வடநூலார் சிலர் கூறுவர். இலக்கணை தனக்குரிய ஆற்றலாற் புலப்பாடின்றி அனுமானத்தாற் புலப்படும் பொருளுடைய சொல்லாகும். இலக்கணையெனினும் குறிப்பெனினும் இயையும் குறிப்புச் சொறகளும் குறிப்புப் பொருள்களுமே சான்றோர் இலக்கியங்களிலே மிகுந்து பரந்து வருகின்றன. குறிககோளுடைய சான்றோருக்குக் குறிப்புச் சொற்களும் பொருள்களும் போல செஞ்சொற்களும் பொருள்களும் சிறப்பினைக் கொடுக்கமாட்டா. குறிப்புச்சொற்களும் பொருளும் விரவிய இலக்கியங்களைத் தமிழ்நூல் அறிஞரும் புகழ்வர். தமிழ்நூல் அறிஞர் குறிப்பு விரவாத் தொடையை "வெற்றெனத் தொடுத்தல்" என்ற குற்றங்களுள் ஒன்றாக வைபபர். ஆதலால், இலக்கியம் என்பதற்கு "இலக்கணையால் அறியப்படும் பொருளுடையது" என்று பொருள்கூறலும் பொருந்தும்.

1. இலக்கியத்திற்கு நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் யாது?
2. இலக்கியத்திற்கு வடநூலார் கூறும் விளக்கம் யாது?
3. சான்றோர் இலக்கியங்களில் மலிந்து காணப்படுவது யாது?
4. செஞ்சொற்களின் இயல்பு யாது?
5. தமிழ் நூலறிஞர் 'வெற்றெனத் தொடுத்தல்' எனக்கூறுவது யாது?
6. இலக்கணை என்பதற்குச் சமமான பிறிதொரு சொல் தருக?
7. பின்வரும் சொற்களின் பொருளைத் தருக?
   1. அனுமானம் 2. விரவுதல் 3. தொடை (15 புள்ளிகள்)

**4.** எமது நாட்டில் யுத்தம் காரணமாகக் கண்ணிவெடிகள்/மிதிவெடிகள் தாராளமாகப் புதைககபபட்டுள்ளன.
1. அப்பொருள்கள் இருக்கும் பகுதிகள்
2. வெடிபொருள்களின் தன்மைகள்
3. இவற்றில் சிக்குவதால் உயிர்களுக்கு ஏற்படும் இழப்புகள்
4. இவற்றை எப்படி இனங்கண்டு விலகுதல்
5. யாருக்கு இதுபற்றி அறிவிக்கவேண்டும்

என்பன [illegible] விடயங்களை விளக்கி சுமார் 100 சொற்களில் அமையுமாறு துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக. (15 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு

## அறுபது அகவையைப் பூர்த்திசெய்து ஓய்வுபெறும்

## அதிபர் திரு. அ.மு.அருணாசலம் (இ.அ.சே.தரம் I)

### யா/மானிப்பாய் மெமோறியல் (நவோதய) கல்லூரி - 02.11.2004

### அறிவும் ஆற்றலும் ஆளுமையும் மிக்கஅதிபர்

அமெரிக்க மிஷனரிமார்களால் ஆரம்பிக்கப்பட்டு, நீண்ட கிறிஸ்தவ கல்விப் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்ட மானிப்பாய் மெமோறியல் நவோதய கல்லூரியின அதிபராகப் பணியாற்றி, பணிநிறைவுபெறும் திருவாளர் அ.மு.அருணாசலம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பேருவகையடைகிறோம். 21 வருடங்கள் ஆசிரியராகவும் 15 வருடங்கள் அதிபராகவும் இக்கல்லூரியிலேயே பணியாற்றி ஓயவுபெறும் இவரின் நீண்டகாலக் கல்விப் பணிக்காக மானிப்பாய் கிறிஸ்தவ கல்விச் சமூகம் இவருக்கு என்றும் நன்றியுடையதாக இருக்கவேண்டும். மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் இவர் ஆற்றிய அரும்பணிகள் இக்கல்லூரியின் வரலாற்றில் என்றும் பதியப்படவேண்டும்.

அதிபர் அ.மு.அருணாசலம் அவர்கள் தன்னலம் துறந்த சேவையாளன். கலலூரியைத் தனது இதயமாக, வாழ்வாகக் கருதியவர். பரந்த அறிவும், பல்வகை ஆற்றல்களும் தலைமைத்துவத்தின் சிறந்த ஆளுமையும் இறைவன் இவருக்களித்த கொடைகள். கல்வியிலும் விளையாட்டிலும் மற்றைய துறைகளிலும் கல்லூரியின் விரிவாக்கத்திலும் கல்லூரி வளர்ச்சியடைந்து அரசின் நவோதய திட்டத்துடனும் இணைக்கப்பட்டு இக்கல்லூரியை முழுவளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டிய பெருமை இவரையே சாரும். இவர் பணி நிறைவுபெற்றாலும் இவரது மூச்செல்லாம் மெமோறியல் அன்னையாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இறைவன் தொடர்ந்தும் நற்சுகமும், அமைதியும் மகிழ்ச்சியும் இவருக்கருளி நல்லாசிகள் பலவும் பொழியவேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

அருள்திரு. V.இராஜ்குமார், சபைக்குழு,
தென்னிந்தியத் திருச்சபை, மானிப்பாய்.

### வாழ்த்துச் செய்தி

168ஆண்டுகள் கல்விப் பணி ஆற்றிவரும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் கடந்த 40 ஆண்டுகளாக மாணவன், ஆசிரியன், உப அதிபர், அதிபர் ஆகிய கதாபாத்திரங்களுக்கூடாகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு யுக நாயகனாக திரு.அ.மு.அருணாசலம் அவர்கள் விளங்குகின்றார். தோற்றத்தில் சிறிய உருவமாக இருந்தபோதும், சாதனைகள் படைப்பதில் பல ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்ட பெருமனிதர் ஓய்வுபெறப்போகின்றார் என்ற செய்தியை மெமோறியல் அன்னையின் கல்விச் சமூகத்தவரும் ஏனைய கல்விப் புலத்தைச் சார்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலையில் அவதிப்படுகின்றனர்.

கல்வி நிறுவனத்தைத் தனது அன்னையாக, கோயிலாக மதித்து தான் அதிபராக இருந்த 15 வருட காலத்தில் தன்னைப் பாடசாலை வளர்ச்சியில் முழுமையாக அர்ப்பணித்து இங்கு சேவையாற்றிய ஏனைய அதிபர்களையும்விட மிக உயர்ந்த பதிவுகளை மெமோறியல் அன்னையின் வரலாறாக விட்டுச் செல்கின்றார். வேற்றுமையில் ஒற்றுமை கண்ட அதிபராகவும் பாடசாலைச் சமூகத்தின் சகல தரப்பினரையும், அதிகாரிகளையும் ஒருங்கிணைத்துச் செயற்படும் ஆளுமை கொண்டவர். மிகச் சிறந்த ஒழுக்கநெறிகளைப் பின்பற்றும் மாணவர் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதிலும் கல்விப் பெறுபேறுகளிலும் சகல இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் மெமோறியலின் பெயர் விளங்கச் செய்வதில் வெற்றி கண்டவர். பழைய மாணவர் என்ற வகையில் அவரின் சேவை தொடர்ந்தும் கிடைக்க இறைவன் ஆசியை வேண்டுவதுடன் ஓய்வுக்காலத்தில் தேகஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் தனது [illegible] நீண்ட காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

[illegible],
கோட்டக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்.



### சேவை விவரம்

| | | |
|---|---|---|
| 01.11.1968 - 06.02.1970 | - | ஆசிரியர், யா/நவாலி மகாவித்தியாலயம் |
| 07.02.70 -30.12.71 | - | ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் |
| 01.01.72 - 14.02.80 | - | ஆசிரியர், நு/கைலன் கல்லூரி ஹற்றன் |
| 15.02.80 - 30.09.88 | - | ஆசிரியர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை |
| 01.10.88 - 24.02.89 | - | உப அதிபர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை |
| 25.02.89 - இன்றுவரை | - | அதிபர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை |

### அனைவருக்கும் முன்னுதாரணமானவர்

எமது வழிகாட்டிகளாக எமக்குமுன் வாழ்ந்த மகோன்னதமான மனிதர்களை மறந்துவிடுதல் அவ்வளவு எளிதானதல்ல. பயனுற வாழ்ந்தவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் எமக்குப் பாடமாக அமைகின்றன. அந்தவகையில், தனது சேவைக்காலத்தில் அதிபர் திரு.அ.மு.அருணாசலம் அவர்கள் அனைவர்க்கும் முன்னுதாரணமாக வாழ்ந்து தனது முதல் எழுத்துகளுக்குப் பொருள்சேர்த்துக் கொண்டார். மனித நேயமும் மரினிடப் பண்புகளும் நிறைந்த இவரது வாழ்வு சிறக்க எமது வாழ்த்துகள்.

செயலாளர், ஆசிரிய நல்லுறவு மன்றம்.

### வாழ்த்துச் செய்தி

மானிப்பாய் மெமோறியல் அன்னையின் மடியில் மாணவனாக, பின் நல்லாசானாக, உப அதிபராக, தன்னிகரில்லா அதிபராக 27 ஆண்டுகள் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் எங்கள் பழைய மாணவர் சங்கத் தலைவரும் கல்லூரி அதிபருமாகிய திரு.அ.மு.அருணாசலம் அவர்களை பழைய மாணவர் சங்கமானது பெருமையுடன் வாழ்த்துகிறது. அவரின் தலைசிறந்த தலைமைத்துவத்தல் அவர் பாடசாலைக்கு ஆற்றிய பணிகள் அதிசயிக்கத்தக்கன. அவர் ஆற்றிய பணிகள் யாவுமே மெமோறியல் அன்னையின் அத்தியாயத்தின் வரலாற்றுப் பொக்கிஷங்கள். அவரின் தலைமையில் பழைய மாணவர் சங்கம் சாதித்த சாதனைகள் எண்ணிலடங்கா. இத்தகைய பெருமகனார் நீண்ட ஆயுளுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ மானிப்பாய் மருதடி விநாயகர் என்றென்றும் துணையிருக்கட்டும். பழைய மாணவர் சங்கம்.

### பண்பால் உயர்ந்த அதிபர் வாழி!

மானிப்பாய் மெமோறியல் நவோதயாக் கல்லூரியில் கடந்த பல வருடங்கள் தன்னலமற்ற சேவையால் உயர்ந்தவர் அதிபர் அ.மு.அருணாசலம் அவர்கள். இவரது காலம் கல்லூரி வாழ்வில் ஒரு பொற்காலம் எனலாம். ஒரு மனிதன் எவ்வண்ணம் வாழவேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு இக்கல்லூரியை உயர்த்தியதோடு, மட்டுமல்லாது மாணவர்களையும் பெரியவர்களிடமும் ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் பண்பு, மரியாதை, அடக்கம் போன்ற நற்குணங்களை வளர்த்து நற்பிரஜைகளாக உருவாக்கிய பெருமை அதிபர் அவர்களையே சாரும். இவ்வண்ணம் கல்லூரியை மட்டுமல்லாது சமூகத்தையும் வளர்தெடுத்து ஓய்வுபெற்றுச்செல்லும் அதிபர் அவர்கள் 'நிறைவாழ்வு' வாழ்ந்து சமூகத்திற்கு மேலும் தொண்டுசெய்ய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயகுமாரக் குருக்கள்
மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்.

### மெமோறியல் அன்னையின் தவப்புதல்வன் பற்றி...

மெமோறியல் என்றால் அருணாசலம் என்று கருதும் அளவுக்குக் கல்லூரியுடன் இரண்டறக் கலந்தவர். இவரின் ஆளுகையில் வெளிக்கொணரப்பட்ட சிறப்புக்களாவன மாணவர்களின் தரங்களில் ஏற்பட்ட பண்பாட்டுப் பரிமளிப்புகளையும் மாணவர்களின் பெறுபேற்று உயர்வுகள், இணைபாடவிதான செயற்பாடுகளன் பங்களிப்புகள், பாடசாலைக்குப் புறம்பான தொண்டுகள், மருதடி விநாயகா உற்சவகால நிகழ்வுகள் போன்றவற்றில் தம் கரம்கொடுத்து உதவும் தன்மை. தறதுணிவுடன் எதனையும் முன்னெடுத்துச் செல்லும் ஆற்றல், இவை யாவும் அவர் ஆசிரியாகளோடு இணைந்து வெற்றி கண்ட நிலைகளாகும். இதைவிட இடப்பெயாவின்போது வன்னியல் யோகபுரம் மகாவித்தியாலயத்தின் உயர்வுக்கு வழி சமைத்தவர். எப்பணி செய்யினும் அப்பணியில் முழுமை கண்டவா; சாதி, மதம், ஏழை, பணக்காரன் என்பதற்கு அப்பாற்பட்டவர். இவரது சிறப்பினைக் கண்ட வலிகாமம் வலயம் அவரை வாழ்த்துவதில் பெருமை அடைகின்றது. அவரது ஓய்வுக்காலம் இனிதே அமைய மன நிறைவுடன் வாழ்த்துகிறேன்.

திருமதி றெ.இருதயநாதன்.
வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்.

### கல்லூரியின் மைந்தன்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையை வழிநடத்தி வந்த செயற்றிறன் மிக்க அதிபர்களுள் திரு.அ.மு.அருணாசலம் அவர்களும் ஒருவர். இவர் இக்கல்லூரியிலே கற்றும் கற்பித்தும் அதனை நிர்வகித்தும் வந்தமையால் கல்லூரியைத் தனது அன்னை எனக் கருதிப் பணியாற்றினார்.

எந்த விடயத்தையும் நிதானமாக முன்னெடுத்துச்செல்லும் இவரது வல்லமையால் எமது கல்லூரி பௌதிகவளம் நிறைந்ததாகக் காணப்படுவதுடன், சகல துறைகளிலும் அதீத வளர்ச்சியடைந்து வருகிறது. இவரது பதவிக்காலத்தில் எமது கல்லூரி "நவோதயா" திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க ஒரு சிறப்பம்சமாகும். இவர் தனது அறுபதாவது அகவையில் ஓய்வுபெறுவது கல்லூரிக்குப் போழப்பு என்றாலும் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பு நல்குவாரென எதிர்பார்க்கின்றேன். அவரது பிற்காலம் சீரும், சிறப்புடனும் அமைய எல்லாம் வல்ல நடேசப்பெருமானையும் யேசுபிரானையும் வேண்டி எனது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

சி.சண்முகநாதன்.

### வாழ்த்துச் செய்தி

மானிப்பாய் மெமோறியல் பாடசாலையின் பழைய மாணவனாகவும் பின் ஆசிரியராகவும், உப அதிபராகவும் , அதிபராகவும் அரும்பணியாற்றி இப்பாடசாலையைத் தனது கண்ணாகப் போற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு முழுமூச்சாகத் தன்னை அர்ப்பணித்து சிறந்த தலைமைத்துவம் என்று பிறர் போற்றும் வண்ணம் எமது பாடசாலையை வழிநடத்தி தற்போது ஓய்வுபெறுகின்ற எமது அதிபர் திரு. அ.மு.அருணாசலம் அவர்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டும் என பாடசாலை சமூகத்தின் சார்பில் வாழ்த்துகின்றோம். பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

---

"இன்னல்கள் போக்கியெங்கும்
[illegible] இகமீதில்
தோன்றிய இத்தீபத்திருநாளில்"

....உங்கள் அன்புக்குரியவர்களுக்கு
தீபத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்வுற
சுடர் ஒளி, உதயன் பத்திரிகைகள்
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் நிறுவனத்துடன்
இணைந்து வழங்கும் 'தீபாவளி வாழ்த்து அட்டை''
07-11-2004 அன்று
வெளிவரும் சுடர் ஒளி மற்றும் உதயன்
வார இதழ்களுடன் இலவசமாக வழங்கப்படும்
என்பதை வாசகர்களுக்கு
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.
உங்கள் பிரதிகளை முன்கூட்டியே அருகிலுள்ள
பத்திரிகை விற்பனையாளரிடம்
பதிவு செய்துகொள்ளுங்கள்.




### மரத்தளபாட கண்காட்சியும் விற்பனையும்

மொரட்டுவ மரத்தளபாட நிறுவனத்தின் தளபாட விற்பனையும் கண்காட்சியும் காலை 9மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகிய இக்காண்காட்சி எதிர் வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பல வகை மரத்தளபாடங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.(8-204)

### புதிய தபால்பெட்டி

உலக தபால் தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு தபால் அலுவலகம், சில்லாலை சாந்தை சித்தி விநாயகர் சனசமூக நிலையக் கட்டடத்தில் அப்பகுதி மக்கள் தங்கள் கடிதங்களைத் தபாலில் சேர்ப்பதற்கு வசதியாகப் புதிய தபால்பெட்டி ஒன்றை வைத்துள்ளது.


### தேவை

எமக்குப் பின்வருவோர் வேலைக்குத் தேவைப்படுகின்றனர்.
★ மருந்து விற்பனையில் அனுபவம் பெற்ற பெண் விற்பனையாளர்
★ பயிற்சி பெற்ற பெண் தாதியர்.
★ O/L, A/L படித்த பெண்கள்.
தாதிப் பயிற்சி பெற விரும்புகின்றவர்கள்.
தொடர்புகளுக்கு நேரில் வரவும்

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(26-16-44) (அமுல் கிறீம் கவுஸ் அருகே). (சி-38621)
08, இராமையார்செட்டியார் லேன், யாழ்ப்பாணம்.




உ
சிவமயம்

## சங்கானை சிலம்புப்புளியடி
## அருள்மிகு சாமுண்டேஸ்வரி சமேத
## ஸ்ரீஞானபைரவர் தேவஸ்தான
## புனருத்தாரண நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா
## மகாகும்பாபிஷேகம்

**காலம்:** 01.11.2004 திங்கட்கிழமை யாகாரம்பம்
02.11.2004 செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்புச் சாத்துதல்
காலை 9.00 முதல் மாலை 5.00வரை.
03.11.2004 புதன்கிழமை மகாகும்பாபிஷேகம் காலை
9.00 மணி முதல் 11 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

**கும்பாபிஷேக பிரதம குரு:**
சிவாகமகிரியாரத்னம், சிவாகமஞானபாஸ்கரன், வேதசிவாகமஞானபானு இந்து மத குருபீட யாழ்.மாவட்ட அமைப்பாளர், சங்கானை கலாநிதி சிவஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார அவர்கள்.

அடியார்கள் வந்து தரிசித்து அருள்பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

சிலம்புப் புளியடி,
சங்கானை. (38192) (43-16-44-26)

- ஆலய தர்மகர்த்தா
தி.இராஜதுரை குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்பில் வடிகால்கள் சீரில்லை மழையினால் மக்கள் பெரும் அவதி

புதுக்குடியிருப்பு,நவ.2

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள வடிகால் அமைப்புக்கள் சீரின்மையால் இப்பிரதேச மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

காலத்திற்கு காலம் வீதி திருத்தம், கால்வாய்கள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அவை பயனற்ற நடவடிக்கைகளாகவே அமைவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் செ.தயானந்தாவைக் கேட்டபோது நன்கு திட்டமிட்டு செயற்படுத்தக்கூடிய திட்டங்கள் இருந்தும் போதிய நிதி இன்மையால் அவற்றினைச் செயற்படுத்த முடியாதுள்ளது எனத் தெரிவித்தார்.

மாரி மழை ஆரம்பித்துவிட்டதால் வீதிகள் வட்டுக் காணிகள், காரியாலயங்கள், பாடசாலைகள் என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வீதிகளில் பயணஞ்செய்ய முடியாதவாறு வீதிகளை மேவியும் நீர் பாய்கிறது. அதனை விட மதகுகள் பழுதடைந்துள்ளன. இதனால், இப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மண்வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுகின்றன. இடம்பெயர்ந்தவர்களின் குடியிருப்புக்கள் யாவும் மண்சுவர் கொண்டதும் கிடுகுகளால் வேயப்பட்டுமே இருக்கிறது. இதனால் இவற்றில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

எனவே, வடிகால் அமைப்புக்களைச் சீர்செய்து பொதுமக்களின் இயல்புவாழ்க்கைக்கு உதவிபுரிய வேண்டுமென சம்பந்தப்பட்ட தரப்புக்களைப் பொது அமைப்புக்கள் கோரியுள்ளன. (8-353)

## காலாவதியான உணவுப் பொருள்கள் அழிப்பு

விசுவமடு,நவ.2

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவுப் பகுதிகளில் அமைந்துள்ள உணவு விற்பனை நிலையங்கள், மென்பான விற்பனை நிலையங்கள் மீது தமிழீழச் சுகாதார சேவையினர் திடீர்சோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது காலாவதியான மென்பானங்கள், குளிர்சாதனப் பெட்டியிலும் விற்பனைப் பகுதியிலும் வைக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டன.

அத்துடன், விற்பனை செய்த உரிமையாளர்கள் மீதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நுகர்வோர் மென்பானப் போத்தல்களில் அச்சிடப்பட்ட காலாவதியான திகதி, உற்பத்தித் திகதி என்பவற்றைக் கவனத்தில் எடுத்து கொள்வனவு செய்யுமாறு தமிழீழச் சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

அத்துடன் பழுதடைந்த, காலாவதியான உணவு மற்றும் மென்பானங்கள் விற்பனை செய்வதை இனங்கண்டு உடனடியாகத் தமக்கு அறிவித்து ஒத்துழைக்குமாறு முல்லைத்தீவு மாவட்டச் சுகாதாரச் சேவையினர் கேட்டுள்ளனர்.(8-402)

## புதிய கட்டடத் திறப்பு விழா

விசுவமடு,நவ.2

உடையார்கட்டு, குரவயல் தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா பாடசாலை அதிபர் மேகநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது

மங்கள விளக்கினை பெற்றோர், ஆசிரிய சங்கத்தின் செயலாளர், அம்மன் ஆலய குருக்கள் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை முல்லை மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் அறிவன்பன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்விற்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள். (8-402)






வட்டக்கச்சி ம.வியில் தமிழீழக் கல்விக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற தரம் 1,2 ஆகியவற்றில் ஆங்கிலப் பாடத்தினை அறிமுகப்படுத்துவது தொடர்பான இரண்டாம் கட்டச் செயலமர்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தேசியக் கொடியேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். ஆரம்ப நிகழ்வில் தமிழீழக் கல்விக் கழகச் செயற்றிட்டப் பொறுப்பாளர் ப.இளவழுதி தலைமையுரை ஆற்றுவதையும் அருகில் கிளிநொச்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தனராஜா (இடது), ஆஸ்திரேலிய நுண் அபிவிருத்திப் பங்காளர் நிறுவனத் தலைவர் மகேசன் கந்தையா (வலது), தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம்

*(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

## நெற்செய்கைப் பயனாளிகளுக்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டன

ஸ்கந்தபுரம்,நவ.2

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் 'நொறாட்', 'போரூட்' நிறுவன நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம்', கண்ணகைபுரம், அக்கராயன் பகுதியில் நடைமுறைப்படுத்தும் நெற்செய்கைத் திட்டப் பயனாளிகளுக்கான உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் திரு.ம.சுதர்சன் தலைமையில் கடந்த 25 ஆம் திகதி அக்கராயன் அபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், கிராமசேவை அலுவலர் எஸ்.மகேந்திரன், 'போரூட்' நிறுவன திட்ட அலுவலர் சாந்தலிங்கம், அக்கராயன் கிராம சேவை அலுவலரும் அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளருமான எஸ்.சபாரட்ணம், தமிழர் புனர்வாழ்வுக்கழக அக்கராயன் பிரதேச உதவிப் பணிப்பாளர் சி.கோ.நல்லையா, அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் வழங்கினர். அத்தோடு, பயனாளிகளுக்கான நெற்செய்கைக்கான உள்ளீடுகள் இவர்களால் வழங்கப்பட்டன. கண்ணகைபுரத்தைச் சேர்ந்த 25 பயனாளிகளும் அக்கராயனைச் சேர்ந்த 30 பயனாளிகளும் உள்ளீடுகளைப் பெற்றுக்கொண்டனர். ஒரு பயனாளிக்கு 14ஆயிரத்து 700 ரூபா பெறுமதியான உள்ளீடுகளும் உழவுப்பணமும் வழங்கப்பட்டன. (8-381)




## கல்மடு விவசாயிகளுக்கு வீட்டுத்தோட்டப் பயிற்சி

பரந்தன்,நவ.2

'நிகொட்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் கல்மடுப் பிரதேச விவசாயிகளுக்கு விவசாயம் மற்றும் வீட்டுத்தோட்டம் சம்பந்தமான பயிற்சியும் கருத்தரங்கும் கடந்த 28ஆம் திகதி கல்மடு அ.த.க.பாடசாலையில் இடம்பெற்றன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டக்கச்சிப் பிரதேச இணைப்பாளர் ச.லொயிட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விவசாயம் மற்றும் வீட்டுத் தோட்டம் சம்பந்தமான பயிற்சிகளைப் புளியம்பொக்கணை கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் கே.கேமா, கிளிநொச்சி விவசாயப் போதனாசிரியர் சௌந்தரராஜன், கண்காணிப்பு உத்தியோகத்தர் ரமணிச்சந்திரன் ஆகியோர் வழங்கினார்கள்.

இப்பயிற்சி வகுப்பில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தொகையான விவ்சாயிகள் கலந்து கொண்டு பயனடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (8-352-204)

## கடும்மழை காரணமாக குளங்களில் நீர்மட்டம் உயர்வு

பரந்தன்,நவ.2

கடந்த சில நாள்களாகப் பெய்த மழை காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரிய மற்றும் நடுத்தரக் குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதிவரை பெய்த மழை காரணமாகக் குளங்களின் நீர்மட்ட அளவு வருமாறு:-

இரணைமடுக்குளம் 15 அடி - 05 அங்குலம், அக்கராயன்குளம் 11 அடி 10 அங்குலம், கனகாம்பிகைக் குளம் 6 அடி 2 அங்குலம், கல்மடுக்குளம் 11 அடி, வன்னேரிக்குளம் 05 அடி 09 அங்குலம், ஆனைவிழுந்தான்குளம் 10 அடி, பிரமந்தனாறுக்குளம் 04 அடி 03 அங்குலம், புதுமுறிப்புக் குளம் 04 அடி 06 அங்குலம்

இவை தவிர, கடந்த 27ஆம் திகதி அக்கராயன் குளப் பகுதியில் 46.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் 28 ஆம் திகதி இரணைமடுக்குளப் பகுதியில் 1.03 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக கிளிநொச்சி நீர்ப்பாசனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (8-352-204)

## தியாக தீபம் திலீபன் மருத்துவ நிலையங்களில் செப்ரெம்பர் மாதம் 18,656 பேருக்குச் சிகிச்சை

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த செப்ரெம்பர் மாதம் 12 நிலையங்களிலிருந்தும் 18,656 பேருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இதில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை நிலையங்களான கற்சிலைமடுவில் 2,468 பேருக்கும், மாங்குளத்தில் 3,203 பேருக்கும், ஆழியவளையில் 2,078 பேருக்கும், அளம்பிலில் 1,860 பேருக்கும், பூநகரியில் 1,832 பேருக்கும், புளியங்குளத்தில் 1,687 பேருக்கும், புங்குடுதீவில் 1,542 பேருக்கும், அடம்பனில் 1,251 பேருக்கும், ஐயங்கன் குளத்தில் 1,181 பேருக்கும், கதிரவெளியில் 1,041 பேருக்கும் பாட்டாளிபுரத்தில் 1,003 பேருக்கும், நைனாமடுவில் 404 பேருக்குமாக மொத்தம் 18,656 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களுள் சுவாசப்பாதைத் தொற்றினால் 3,509 பேரும், வைரஸ் காய்ச்சலினால் 3,615 பேரும், இடுப்பு வலிப்பினால் 2,230 பேரும், காயங்களினால் 1,760 பேரும், சிறுநீர் வழி தொற்றினால் 267 பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 202 பேரும், தோல் நோய்களினால் 809 பேரும், பல்நோய்களினால் 267 பேரும், நெருப்புக் காய்ச்சலினால் 08 பேரும், காதுத் தொற்றினால் 105 பேரும், கண் நோயினால் 110 பேரும், வயிற்றோட்டத்தினால் 293 பேரும், வலிப்பினால் 187 பேரும், குடற்புழுத் தொற்றினால் 1,879பேரும், இதய நோய்களினால் 54 பேரும், குருதிச்சோகையினால் 326 பேரும், குடற்புண்ணினால் 278 பேரும், ஒவ்வாமையினால் 570 பேரும், நாய்க்கடியினால் 96 பேரும், பாம்புக் கடியினால் 20 பேரும், உயர் குருதி அமுக்கத்தினால் 330 பேரும், தொய்வினால் 591 பேரும் உட்பட மொத்தமான 18,656 நோயாளாகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன் நடமாடும் மருத்துவ சேவையினரால் 2,539 பேருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. இந்த நடமாடும் மருத்துவ சேவையானது 30 இடங்களில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

## கொடிவாரமும் உண்டியல் திட்டமும்

வட்டக்கச்சி,நவ.2

கிளிநொச்சி சமுதாய முன்னேற்ற நிலையமானது நலிவுற்றோரின் நல்வாழ்வுக்காக கொடிவாரத்தினை தற்போது அனுஷ்டித்து வருகிறது. அத்துடன் இத்திட்டத்திற்கு நிதி சேகரிக்கும் உண்டியல் திட்டமொன்றினையும் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்நிறுவனமானது தாயகப் பிரதேசத்தில் போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட முதியோர்கள், ஊனமுற்றோர்கள், உழைப்பாளரை இழந்த குடும்பத்தினர் என்போருக்குப் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (4-405)

## பட்டதாரிகளுக்கான கணனிப்பயிற்சி கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தில்

வட்டக்கச்சி,நவ.2

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்று வரும் பட்டதாரிகளுக்கான பயிற்சியில் கணனிப் பயிற்சி நெறி கிளிநொச்சி தொழிநுட்பக் கல்வி நிறுவனத்தில் நடைபெற்று வருகிறது. கிளிநொச்சியில் நவீன வசதிகளுடன் கூடிய, பல நவீன கணனித் தொகுதிகளைக் கொண்ட கணனி ஆய்வுகூடம் இங்கு காணப்படுவதனாலேயே மேற்படி பயிற்சி நெறியினை இங்கு நடத்த மாவட்ட செயலக வட்டாரங்கள் தீர்மானித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏனைய பயிற்சிகள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலேயே நடைபெற்று வருகின்றன. (8-405)

## வாய்க்கால் தூர்வை அகற்றப்படவில்லை; குடிமனைகளுக்குள் வெள்ளம்!

பரந்தன்,நவ.2

கிளிநொச்சி, ஜெயந்தி நகரிலிருந்து உருத்திரபுரம் குளத்திற்குச் செல்லும் 4 கிலோமீற்றர் தூரமான வெள்ளவாய்க்கால் தூர்வை அகற்றாத காரணத்தால் இப்பிரதேச மக்களின் குடிமனைக்குள் வெள்ளம் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக வெள்ளம் குளத்திற்குச் செல்லும் அளவு அதிகரித்துக் காணப்படுகிறது.

சரியானமுறையில் வாய்க்கால்களின் தூர்வை அகற்றப்படாத காரணத்தால் உருத் திரபுரம், ஆனந்தம் பண்ணை, இரத்தினம் பண்ணை, டி.8ஆம் பகுதியினைச் சேர்ந்த குடிமனைகளுக்குள் வெள்ளம் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாய்க்காலை உரிய முறையில் தூர்வை எடுத்துத் தருமாறு உருத்திரபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பலமுறை உரிய திணைக்களங்களுக்கு முறையீடுசெய்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (8-204-352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

கோப்பாய் VCக்கு அண்மையில் 2 பரப்புக் காணியுடன் புதிய வீடும், மாதா கோயில் ஒழுங்கையில் 17 பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு வீடுகளும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 109, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021 222 2132. (38209)

கடை ஒன்றிற்குரிய பாவித்த சோக்கேஸ், அலுமாரி, கண்ணாடிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், மேசைகள், இரும்பு - மரக்கதிரைகள் மற்றும் தொழிற்சாலை உபகரணங்கள், இயந்திர சாதனம் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சிவராசா, கூழாவடி, ஆனைக்கோட்டை. (38198)

## வேப்பமரம் விற்பனைக்கு

7 அடி சுற்று உடைய வேப்பமரம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 47, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (38204)

## வீடு-வாடகைக்குத் தேவை

கொக்குவில், திருநெல்வேலி, கந்தர்மடம் ஆகிய பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. T.P.:0776-660289. (38188)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி - யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 1½ பரப்புக்காணி மூன்று வீடுகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.செ. இரத்தினம், 332, கச்சேரி நல்லூர் வீதி, T.P.: 0777 291971. (38179)

## வாடகைக்கு

திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றில் அறை வாடகைக்கு உண்டு. முழு வீட்டையும் நல்ல முறையில் பராமரிக்கக் கூடிய மாணவர்கள் அல்லது வேலை பார்க்கும் ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 021.222 2478. (38214)

## நீரிழிவு நோயாளிகளுக்கு

*நீரிழிவு நோயாளிகளே!*
*உங்களின் நீரிழிவு நோயைக் குணப்படுத்தவல்ல சிறுகுறிஞ்சாக் கன்று ஒன்றை உங்கள் வீட்டில் நட்டு வளருங்கள்.*
தொடர்புகளுக்கு: ☎ 021 222 5802 (சி-38629)

## விற்பனைக்கு

Re-Manufactured Canon - N.P. 1215 Photo Copy Mechine (Japan) **விற்பனைக்கு உண்டு.** தொடர்பு: **த.இரவீந்திரராஜா**, *109 (137), பலாலி வீதி (தபால் பெட்டிச் சந்தி), திருநெல்வேலி.* (38210)


# மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 3 நூல்கள் வெளியீடு

## பழைய மாணவர்கள் கொழும்பில் கூடி ஆராய்வு

வலி.தென்மேற்கு,நவ.2

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கக்கிளைகள் அண்மையில் கொழும்பில் கூடி இவ்விழாவை சிறப்பான முறையில் நடத்துவதற்கு பல்வேறு உதவிகளை செய்வது என்று தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் 2010 ஆம் ஆண்டில் இக்கல்லூரியில் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையில் அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பல நாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பழைய மாணவர்களின் சிறுகதை, கவிதை, குழந்தைக் கவிதை ஆகிய ஆக்கங்களைப் பெற்று மூன்று நூல்களை வெளியிடுவது என்று தீர் மானிக்கப்பட்டுள்ளது. மயிலங்கூடலூர் பிநடராசன், திருமதி கோகிலா மகேந்திரன், பா.மகாலிங்கசிவம் ஆகியோர் இந்த நூற்பதிப்புக் குழு உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர். பழைய மாணவர்கள் மற்றும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசித்து வரும் கல்லூரியின் பழைய மாணவர்கள் சிறுகதை, கவிதை மற்றும் குழந்தைக் கவிதை ஆகிய தங்கள் ஆக்கங்களை இவர்களுடன் தொடர்பு கொண்டு அனுப்பிவைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-135)

# பண்டத்தரிப்பு தபாலகத்துக்கு தொலைபேசி இணைப்பு இல்லை

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு தொலைபேசி வசதி இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இந்தத் தபால் அலுவலகத்திற்கு தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தபாற்திணைக்களம் கடந்த ஜனவரி மாதத்தில அதற்கான விண்ணப்பத்தையும் கட்டணத்தையும் உரியவர்களிடம் சமர்ப்பித்திருந்தது என்றும் -

ஆனால், இதுவரை தொலைபேசி இணைப்பு அலுவலகத்திற்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் - கவலை தெரிவிக்கப்படுகின்றது. இத்தபால் அலுவலகம் ஏழு உபதபால் அலுவலகங்களைக் கொண்ட 'ஏ' தரத்திலுள்ள தபால் அலுவலகம் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-135)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஐப்பசித் திங்கள் 18ஆம் நாள் (03.11.2004) புதன்கிழமை முற்பகல் 9.14 மணி தொடக்கம் 11.10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

திரு.செ.கணபதிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரன் திருவளர் செல்வன் **கிருபாகரன்** அவர்களுக்கும்



திரு.து.சோமசுந்தரம் தம்பதிகளின் ஏகபுத்திரி திருவளர் செல்வி **அமுதா** அவர்களுக்கும்

காமாட்சி அம்பாளின் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் மகாமாரியம்மன் கோயில் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

**திருமதி ம.கணபதிப்பிள்ளை,**
13, அரசடி ஒழுங்கை,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

**திரு.து.சோமசுந்தரம்,**
6, சேர் பொன்.இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(38203)(42-11-19)


# கேள்வி அறிவித்தல்

## அரசாங்க அதிபர் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்

1. மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் அவர்களினால் வைத்திய அதிகாரி விடுதி (இல.2) திருத்தவேலை, புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை. வேலைக்குரிய கேள்விகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபைத் தலைவரினால் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அரசாங்க அதிபர் செயலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்-8 இலும் அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோர் ஆவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்து, தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். கேள்வி வைப்புப் பணத்தை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| வைத்திய அதிகாரி விடுதி (இல.2) திருத்தவேலை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை. | 50,000/= | 750/= |

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன், ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், மாகாணக் கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடம் இருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*மாவட்டச் செயலாளர்,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*02.11.2004*

(சி-38628)(34-42-11-19)

**செ.பத்மநாதன்,**
அரச அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

# தெல்லிப்பழைச் சந்தி வரை பஸ்சேவை நடத்தக் கோரிக்கை

தெல்லிப்பழைச் சந்தி வரை பஸ்சேவையை நீடிக்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று தெல்லிப்பழை பிரதேச ஒருங்கமைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், யூனியன் கல்லூரி, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் மற்றும் புற்றுநோய் வைத்தியசாலை என்பன இயங்குகின்றன. பஸ்சேவையை தெல்லிப்பழை சந்திவரை நீடிப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் நன்மைகள் கிடைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் உரியவர்களுடன் தொடர்புகொண்டு இதற்கான அனுமதியைப் பெறவேண்டும் எனவும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன. (3-86)


## வடக்கு-கிழக்கு புற்றுநோயாளர் உதவிமையத்தின் (CANE-UK)

## பெண்களுக்கான இலவச மருத்துவமுகாம்

நாள் : **04.11.2004** வியாழன் காலை **9** மணி முதல் பிற்பகல் **3.00** மணி வரை

இடம் : **69**, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

வழமைபோல் CANE-UK அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புற்றுநோய் கண்ட மற்றும் சந்தேகங்கொண்ட பெண்கள், எமது மருத்துவக் குழு மூலம் இலவச சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**- ஏற்பாட்டாளர்கள்.**

(38206)(42-11-19)


## துயர் பகிர்கின்றோம்

*எமது பாடசாலை ஆசிரியை திருமதி* **அம்பிகை சிவஞானத்தின்** *அன்புத் தந்தையார்*

**செல்லையா பரம்சோதி**

காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

(34-42-11-19) (38212)

# மரண அறிவித்தல்கள்

## இராசையா நடனசபாபதி சர்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நடனசபாபதி சர்மா நேற்று (01-11-2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-11-2004) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வற்றாக்கை அம்மன் கோயிலடி,
கந்தரோடை.

தகவல்:
ந.பத்மினி
*(மனைவி).*

(38211)(26-42-11-19)

## எமில் மனோகரன்

(பொறியியலாளர்)

மாதகல், புனித அந்தோனியார் வீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட, மாட்டீன் எமில் மனோகரன் 26.10.2004 இல் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் ஜெசிந்தர் பத்மினியின் அன்புக் கணவரும் மாட்டீன் - ஸ்ரெலா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிங்கநாயகம் - லில்லி தம்பதிகளின் அன்பு மருமகனும் இசூமியா, சோபனா, டிறாஜ்செல்வன், டென்சில், பிறின்ஸ்லி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரி, சந்திரா (ஆஸ்திரேலியா), சந்திரன் (பொறியியலாளர், கட்டார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பீற்றர் போல், ஹென்றி, மதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (02.11.2004) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*108,4ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சூ.மாட்டீன்
(தந்தை).

(38205)(42-11-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைபந்தாட்டத்தில் சாதனைகள் படைத்துவரும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வலை பநதாட்ட அணியின் சாதனைகளைத் தொடர்ந்து படைத்து வருகின்றனர்.

1993ஆம் ஆண்டு இக்கல்லூரியில் வலை பந்தாட்ட அணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலைபந்தாட்ட அணி ஆரம்பிக்கப்பட்ட அந்தக் காலப்பகுதியில் இப்பாடசாலை சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயமாக இருந்தது.

அக்காலப்பகுதியில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட 15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவு ஆகிய மூன்று அணிகளும் கோட்ட மட்டங்களைத் தாண்டி மாவட்டம் வரைக்கும் தமது வெற்றி மகுடத்தினைச் சூடி பாடசாலைக்குப் பெருமை தேடிக்கொடுத்தன.

1993ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து 15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவுகள் வலய மட்ட சம்பியன்களாகி வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் எந்தப் பாடசாலையும் படைத்திராத சாதனையினை இப்பாடசாலை செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இதனைவிட 1997 தொடக்கம் 2003 வரை தொடர்ச்சியாக இப்பாடசாலையின் வலைபந்தாட்ட அணியினர் மாகாண மட்டப்போட்டிகளிலும் தேசிய மட்டப்போட்டிகளிலும் பங்குபற்றி அங்கு சாதனை நிலைநாட்டி வருகின்றனர்.


மாகாண மட்டத்தில் மூன்று தடவை முதலாம் இடத்தையும், 4 தடவை இரண்டாம் இடத்தையும், ஒரு தடவை மூன்றாம் இடத்தையும் பெற்று மகாண மட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பெயரை நிலைநிறுத்தியுள்ளன.

2002ஆம் ஆண்டு மகாண மட்டப் போட்டியில் 1[illegible] வயதுப் பிரிவினரும் 19 வயதுப் பிரிவினரும் சம்பியன்களாகினர். யாழ்.மாவட்டத்தில் வேறு எந்தப் பாடசாலையும் பெற்றிராத வெற்றியைக் கிராமப்புறத்திலுள்ள சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி வலைபந்தாட்ட அணி பெற்றுள்ளது என்பது போற்றுதற்குரிய சாதனையாகும்.

இதனைவிட லண்டன் மாநகரில் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துவின் 19 வயதுப் பிரிவு அணியில் அங்கம் வகித்த வீராங்கனைகள் செல்வி திருச்செல்வம் சங்கீதா, செல்வி பிரிந்தா சோமசுந்தரம் ஆகியோர் தாயக வலைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்துத் திறமையை வெளிப்படுத்தினர்.

1997ஆம் ஆண்டு முதல் 2004 வரை தொடர்ச்சியாக மகாணமட்டத்தில் பிரகாசித்து வருகின்ற இக்கல்லூரியின் வலைபந்தாட்ட அணியினர் இம்முறையும் (15வயதுப் பிரிவு) மாகாண மட்டத்தில் சம்பியனாகித் தேசிய மட்டப்போட்டியில் கால் இறுதியாட்டம் வரைக்கும் சென்று கல்லூரியின் பெயரை நிலைநாட்டியுள்ளனர்.

இத்தனைக்கும் மேலாக இந்து மகாவித்தியாலயம் என்று இருந்த பெயர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி என்று மாற்றப்படுவதற்குக் கூட வலைபந்தாட்ட அணியினரின் தொடரான வெற்றிகளும் ஒரு காரணம் என்று சொன்னால் மிகையாகாது.




2004ஆம் ஆண்டு தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றிய 15 வயதுப் பிரிவினர்.



1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெற்றிகளைக் குவித்து பெருமை சேர்த்த வலைபந்தாட்ட அணியினர்.

போட்டியில் கலந்துகொண்ட 15 வயதுப் பிரிவின் வீராங்கனைகளை அணுகி உரையாடியபோது அவர்களின் உள்ளத்திலிருந்து உதிர்ந்தவை:-

எமது பாடசாலையின் வலைபந்தாட்ட அணியினர் இத்தகைய சாதனைகளை நிலைநாட்டுவதற்கும் வெற்றிகளைத் தொடர்ந்தும் தக்கவைப்பதற்கு உறுதுணையாக இருப்பவர் எமது கல்லூரியின் அதிபர்தான். அத்துடன் எமக்கு சகல வழிகளிலும் உதவி புரிகின்ற ஆசிரியர்களையும் குறிப்பிடவேண்டும்.

எங்களுடைய அதிபர் நாம் பயிற்சியில் ஈடுபடுகின்ற வேளையில், எம்மோடு காலை, மாலையென்று பாராது நின்று எமக்கு உற்சாகமூட்டுவார்.

எமது கல்லூரியின் வலைபந்தாட்ட அணிகள் ஒவ்வொரு போட்டிகளுக்கும் தயாராகின்ற போது எங்களுக்கு அதிபர் முதலில் கூறுவது என்னவென்றால், மூன்று அணிகளும் தேசிய மட்டத்தில் சம்பியனாக வேண்டும் என்பதே இந்த ஊக்கமும் நம்பிக்கையும்தான். இத்தகைய வெற்றிகளை எம்மால் பெறமுடிந்துள்ளது.

கல்லூரியின் அதிபர் ச.சிவனேஸ்வரனை அணுகியபோது - எமது மாணவர்களின் விடா முயற்சியும் கல்லூரி ஆசிரியர்களின் ஒத்துழைப்புமே இத்தகைய பெருமையை எமக்கு ஈட்டித் தருகின்றன - என்றார்.

எமது கல்லூரியைப் பொறுத்தவரை நிதிப் பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை இவற்றையெல்லாம் கருத்திற்கொள்ளாது இருக்கின்ற வளங்களைக் கொண்டு எமது வலைபந்தாட்ட அணியினர் யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்ல வெளிமாவட்டப் பாடசாலைகளையும் வெற்றியீட்டி சாதனை புரிகின்றனர்.

எமது எதிர்கால இலட்சியம் என்னவென்றால் 15வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 19 வயதுப் பிரிவு ஆகிய மூன்று அணியினரும் தேசிய மட்டத்தில் வெற்றிகளைச் சூடவேண்டுமென்பதுதான். மாணவர்களும் அந்த இலக்கினை நோக்காகக் கொண்டு தமது பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றார் அதிபர்.

**தொகுப்பு : எஸ்.கவிதரன்**

கிராமத்தில் அமைந்திருந்தாலும் ராஜா ஸ்கூல் என்றும், பின்பு இந்து மகாவித்தியாலயம் என்றும், தற்போது இந்துக் கல்லூரியென்றும் இப்பாடசாலை பெருமை பெற்றுள்ளது.

கிராமப்புறத்தில் இன்று ஒரு பெரும் கல்லூரியாக வலைபந்தாட்டத்தில் வெற்றிகளைக் குவித்து வரும் இப்பாடசாயையின் வலைபந்தாட்ட அணியினர் தொடர்ந்தும் சாதனைகளை ஈட்டி தேசிய மட்டத்தில் ஜொலிக்க வேண்டுமென்று நாமும் உதயன் சார்பாக வாழ்த்துக்களைக் கூறுகின்றோம்.

★

# சேதமடைந்து வரும் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானம்

வலி.வடக்கு,நவ.2

மழைபெய்யும் நேரத்திலும் வெறுங் காலுடன் விளையாடுவதால் துரையப்பா விளையாட்டு மைதானம் மோசமான முறையில் சேதமடைந்து வருவதாக விளையாட்டுக் கழகங்கள் கவலை தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பராமரிப்பில் இருக்கும் இந்த மைதானம் கடந்த ஆண்டில் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் தேசிய விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்காகத் திருத்தியமைக்கப்பட்டது.

தற்போது இம்மைதானத்தினுள் வெளியார் அத்துமீறி விளையாடி வருவதால் மைதானம் மீண்டும் சேதமடைந்துள்ளதுடன், உரிய பராமரிப்புகளின்றி முட்புதர்கள் வளரும் நிலைமையும் காணப்படுகின்றது.

மைதானக் காவலாளிகள் வெளியார் விளையாடுவதைத் தடை செய்யாது விடுவதும் இதற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

இம்மைதானத்தை நல்லமுறையில் பராமரிக்க வேண்டியது யாழ். மாநகர சபையின் கடமையாகும். விளையாட்டுக்கள் தெரிந்த ஒருவரை மைதானத்தின் பராமரிப்பாளராக யாழ். மாநகர சபை நியமனம் செய்வதன் மூலம் இம்மைதானத்தினை நல்லமுறையில் வைத்திருக்க வழியேற்படும் என விளையாட்டு வீரர்களும் ஆர்வலர்களும் கூறுகின்றனர்.

(10-86)



நெய்தல் விழாவையொட்டி குருநகர் இறங்குதுறை[illegible] படகோட்டப் போட்டியில் முதலாம் இரண்டாம், மூன்றாம் [illegible] குருநகர் இறங்குதுறையை நோக்கிக் வந்துகொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: குருநகர்ச் செய்தியாளர்)

# அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி!

**விளையாட்டு**

வலி.வடக்கு,நவ.2

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்களில் வெற்றியீட்டிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய அணிகள் இறுதி ஆட்டத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

16 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில், யூனியன் கல்லூரி 2-1 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை வெற்றிகொண்டுள்ளது.

யூனியன் கல்லூரி முதல் பாதி ஆட்டமுடிவில் இரண்டு கோல்களைப் பெற்றுக் கொண்டது. ஸ்கந்தவரோதயக் கல்லூரி தொடர்ந்து கோல்களைப் பெறும் முயற்சியில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் முயன்று ஆட்டம் முடிவடைவதற்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும் வேளையில் தனது முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது.

ஆட்டமுடிவில் 2-1 என்ற கோல கணக்கில் யூனியன் கல்லூரி வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான இன்னொரு அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் அராலி இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 2 கோல்களைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தின்போது மேலும் ஒரு கோலை புனித ஹென்றியரசர் கல்லூரி பெற்றுக்கொண்டது. ஆட்ட முடிவில் புனித ஹென்றியரசர் கல்லூரி 3-0 என்ற கோல் கணக்கில் அராலி இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டது.

18வயதுப் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பமாகிய சில நிமிட நேரத்திலேயே யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு கோலை பெற்றுக்கொண்டது. இதனைத் தொடர்ந்து ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

முதல் பாதி ஆட்டம் முடிவடையும் போது யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் சோதனையான ஆட்டமாகவே அமைந்தது.

ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. ஆட்ட முடிவில் வட்டுக்கோட்டை யாழப்பாணக் கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் புனித ஹென்றியரசர் கல்லூரியை வெற்றிகொணடது.

வெற்றிபெற்ற அணிகள் இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் இடம்பெறும் போட்டியிலும் விளையாடத் தகுதி பெற்றுள்ளன.

போட்டிகள் யாவும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

(10-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி,வடக்கு,நவ.2

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:

**16 வயதுப் பிரிவு**

3ஆம் இடத்திற்கான ஆட்டம்

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி

**18 வயதுப் பிரிவு**

அரையிறுதி ஆட்டம்

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

(10-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை டிசெம்பர் 13 இல் ஆரம்பம்

2004 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ.(சாதாரண) தரப்பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம்13 ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 23 ஆம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது.

வடக்கு-கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பாகங்களிலும் 3ஆயிரத்து 827 பரீட்சை நிலையங்களில் மேற்படிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

மொத்தமாக 5 லட்சத்து ஆயிரத்து 230 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். பாடசாலை பரீட்சார்த்திகள் 374411 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் 126819 பேரும் இதில் அடங்குவர்.(எ-க)


27.10.2004 இல் அகால மரணமடைந்த தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் பொ.வேணுகோபால் அவர்களின் மறைவையொட்டிய

**கண்ணீர் அஞ்சலி**



வலயத்துக்கோர் நற்பணிப்பாளர்
வந்துதிக்கப் பூரித்தோம்
அவர் சேவை நிறைவுக்குள்
அள்ளிச் சென்றான் கொடுங்காலன்
நிறைவுறா அவர் பணி
நிறைவெய்த வேண்டுகின்றோம்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
வேலணை ப.நோ.கூ,.சங்கம்,
வேலணை.

(சி-38639)(43-16-18-32)



**7 ஆம் நாள் நினைவஞ்சலி**



கடந்த 27.10.2004 இல் அகால மரணமடைந்த தீவக வலயக்கல்விப் பணிப்பாளர்
அமரர்
பொ.வேணுகோபால வாணிதாசன்

தமிழர் தேசத்தின் விடிவிற்காய்
அயராது பாடுபட்ட தமிழ்ப் பற்றாளரே
தீவகக் கல்வி வளர்ச்சிக்காய் தினமும் உழைத்த
தீந்தமிழ் கல்விக் காவலரே,
உமை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் , ஊழியர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை,
யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்,
நயினாதீவு.

*குறிப்பு:* அன்னாரது அஞ்சலிக் கூட்டம் (03-11-2004) புதன்கிழமை பி.பகல் 1.00 மணியளவில் எமது பாடசாலையில் நடைபெறும்.

(38225)(16-18-32)



**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**

*மலர்வு* 01 04 1942




*உதிர்வு* 29 10 1999

அமரர் தம்பிமுத்து சோமசுந்தரம்
திதி:02.11.2004

அவனியில் நீர் எமைப்பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஆயிற்று
அல்லற்படுகின்றேன் நான் அன்பான துணையிழந்து
ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு
ஆதிசிவன் பாதத்தில் அமர்ந்துவிட்டீர்!

*சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.* (38222) (16-18-32)
தங்கள் பிரிவால் துயருறும்: மனைவி.





**தென்னிந்தியாவில் இருந்து பரம்பரை ஜோதிடர்**

**திரு. P.T.R.** அவர்கள்

5 ஆவது முறையாக யாழ்ப்பாணம் வருகை. கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்த்து உங்களது எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ள இன்றே திரு. P.T.R ஐச் சந்திக்கவும்.

திரு.P.T.R ஐச் சந்திக்கும் இடம்:
ஜோதிடர் திரு.P.T.R அவர்கள்
பாலாஜி இன் விடுதி
293, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(38220) (18-16-32)


# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை-2004 டிசெம்பர் நேர அட்டவணை

| | திகதி | | காலை அமர்வு | | மாலை அமர்வு |
|---|---|---|---|---|---|
| 01 | 2004.12.13<br>திங்கள் | 46<br>47<br>48<br>49 | ஆங்கில இலக்கியம்<br>சிங்கள இலக்கியம்<br>தமிழ் இலக்கியம்<br>அரபு இலக்கியம்<br>} 9.00 - 12.00 | 70 | வரலாறு பகுதி I 13.00 - 14.00<br>பகுதி II 14.00 - 15.00 |
| 02. | 2004.12.14<br>செவ்வாய் | 21<br>22<br><br>21<br>22 | சிங்கள மொழியும் இலக்கியமும் பகுதி I<br>தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி I<br>9.00 - 10.00<br>சிங்களம் I மொழியும் இலக்கியமும் II<br>தமிழ் I மொழியும் இலக்கியமும் II<br>10.15 - 12.15 | 21<br>22 | சிங்கள மொழியும் இலக்கியமும் III<br>தமிழ் மொழியும் இலக்கியமும் III<br>13.00 - 15.00 |
| 03. | 2004.12.15<br>புதன் | 31 | ஆங்கில மொழி பகுதி I 9.00 - 10.00<br>பகுதி II 10.15 ~ 12.15 | 12<br>13<br>14<br>15<br>16 | சைவ சமயம்<br>இந்து சமயம்<br>கத்தோலிக்க சமயம்<br>கிறிஸ்தவ சமயம்<br>இஸ்லாம்<br>} பகுதி I 13.15 - 14.15<br>பகுதி II 14.20 - 16.20 |
| 04. | 2004.12.16<br>வியாழன் | 32 | கணிதம் பகுதி II 9.00 - 12.00 | 32 | கணிதம் பகுதி I<br>13.00 - 14.00 |
| 05 | 2004.12.17<br>வெள்ளி | 62<br>63<br>73 | சமஷ்கிருதம்<br>அரபு<br>} 9.00 - 12<br>சுகாதாரமும் உடற்கல்வியும்<br>பகுதி I 9.00 - 10.00<br>பகுதி II 10.15 - 12.15 | 71 | புவியியல் பகுதி I<br>14.00 - 15.00<br>பகுதி II 15.15 - 17.15 |
| 06 | 2004.12.18<br>சனி | 43 | சமூகக்கல்வியும் வரலாறும்<br>பகுதி II 9.00 - 12.00 | 43<br>92<br>93<br>94 | சமூகக்கல்வியும் வரலாறும் பகுதி I<br>13.00 - 14.00<br>தட்டெழுத்து<br>(முதலாம் குழுவிற்கு)<br>14.30 - 16.30 |
| 07. | 2004.12.20<br>திங்கள் | 78<br>79<br>80<br>87<br>88<br>89<br>90<br>95<br>96<br>97<br>98<br>81<br>92<br>93<br>94 | தொழில் நுட்பப் பாடங்கள்<br>} பகுதி I 9.00 - 10.00<br>பகுதி II 10.00 - 12.00<br>வர்த்தகமும் கணக்கியலும்<br>பகுதி II 9.00 - 12.00<br>} சுருக்கெழுத்து 9.30 இலிருந்து | 81<br>92<br>93<br>94 | வர்த்தகமும் கணக்கியலும்<br>பகுதி I 13.00 - 14.00<br>} தட்டெழுத்து<br>(இரண்டாம் குழு)<br>14.30 - 16.30 |
| 08. | 2004.12.21<br>செவ்வாய் | 34 | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்<br>பகுதி II 9.00 - 12.00 | 34 | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்<br>பகுதி I 13.00 - 14.00 |
| 09. | 2004.12.22<br>புதன் | <br>51<br>51<br>53<br>55<br>56<br>57 | நுண்கலைப்பாடங்கள்<br>சித்திரம் பகுதி I 9.00 - 10.00<br>சித்திரம் பகுதி III 10.15 - 12.15<br>பரதநாட்டியம்<br>கர்நாடக சங்கீதம்<br>மேலைத்தேய சங்கீதம்<br>நாடகமும் அரங்கியலும்<br>} பகுதி I 9.00 - 10.00<br>பகுதி II 10.15 - 12.15 | 51 | சித்திரம் பகுதி II<br>13.00 - 15.00 |
| 10. | 2004.12.23<br>வியாழன் | 72 | அபிவிருத்தி<br>பகுதி I 9.00 - 10.00<br>பகுதி II 10.15 - 12.15 | 64<br>65 | சிங்களம்<br>தமிழ்<br>} பகுதி I 13.00 - 14.00<br>பகுதி II 14.15 - 16.15 |

குறிப்பு: இப்பரீட்சையின்போது 'கல்குலேற்றர்கள்', அழிக்கும் திரவங்கள் என்பன பாவிக்கக்கூடாது. பரீட்சை நிலையத்துக்குள் கொண்டு வருவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.




02.11.2004

**6 ஆவது பிறந்ததின வாழ்த்து**

யாழ்.73, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த
*சற்குணராசா சத்தியவாணி(வாணி)* தம்பதிகளின்
செல்வப் புதல்வன் சக்திகிரீவன்(சகி)

தனது ஆறாவது பிறந்த தினத்தை இன்று 02.11.2004 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசை யாகக் கொண்டாடுகின்றார். செல்வன் சகியை கனடாவில் வசிக்கும் அன்பு அப்பா மற்றும் அன்பு அம்மா, அப்பம்மா. அம்மம்மா,தாத்தா,பெரியப்பாமார்,பெரியம்மாமார், மாமி மார், மாமாமார், சித்திமார், சித்தப்பா அனை வரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீ நரசிங்க வைரவப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றனர்.



**சக்திகிரீவன்**

3, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021-222 2782

தகவல்:
தயாமாமா,கிரிமாமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் விளையாடச் சென்ற தமிழ் மாணவன் பிணமாக மீட்பு!

கிரிக்கெட் விளையாடச் சென்ற பாடசாலை மாணவர் ரூபவாஹினி தொலைக் காட்சி நிலையத்துக்கு அருகில் பிணமாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப் பட்டார். கொழும்பு தர்மபாலா மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் தினேஷ் குமார் சொக்கலிங்கம் (வயது 18) என்பவரின் சடலமே நேற்றுக்காலை பௌத்தலோக மாவத்தையில் (புல்லர்ஸ் வீதியில்) தெருவோரத்தில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

கொழும்பு ரொரிங்டன் மாவத்தையில் வசிக்கும் இவர், நேற்று முன்தினம் மாலை கிரிக்கெட் விளையாடுவதற்குத் தனது நண்பர்களுடன் செல்கிறார் எனத் தனது வீட்டில் கூறிவிட்டுச் சென்றுள்ளார் எனப் பொலீஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலத்தில் எந்தவித காயங்களோ அடிபட்டதற்கான அடையாளங்களோ தென்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (க-4)


## கண்ணீர் அஞ்சலி

எமது தீவக வலயக் கல்விப்பணிப்பாளர்

**பொ.வேணுகோபால வாணிதாசன்**

அவர்களின் அகால மரணச் செய்தி அறிந்து ஆற்றொணாத் துயருற்றோம். அவர் தம் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யா/தம்பாட்டி அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்.* அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள்.
(38229)(43-14-17)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் **பொ.வேணுகோபால வாணிதாசன்**
(தீவக வலயக்கல்விப் பணிப்பாளர்)



பாடசாலை மாணவர்களின் நலன்கருதி விபத்துக்களில் இருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சர்வதேச முதலுதவி நிறுவனம் ஆகிய செண்.ஜோன் அம்புலன்ஸ் ஊடாக மாணவருக்கு சிறந்த முதலுதவிப்பயிற்சியை வழங்குவதில் முன்னின்று வழிகாட்டிய **பொ.வேணுகோபால வாணிதாசன்** அவர்களின் இழப்பை அறிந்து துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செண்.ஜோன் அம்புலன்ஸ், மாவட்ட தலைமைச் செயலகம், கொக்குவில்.
உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள்.
(38231) (43-14-17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 23 - 05 - 1944



மறைவு 03 - 10 - 2004

### கிருஷ்ணபிள்ளை தர்மலிங்கம்

அன்பாய் அரவணைத்து எமை வளர்த்த தந்தையே!
அன்புத் தெய்வமே! எம் பாசமிகு ஐயாவே!
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்?
அரங்கேறிய வாழ்க்கை நாடகம் முடிவுக்கு வரும்
நியதியை யார் அறிவார் இவ்வுலகில்.........
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (03.11.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"திருமகால்" சங்கத்தானை, சாவகச்சேரி.* (38226)(43-14-17) - குடும்பத்தினர்.

## க.பொ.த, (சா/த) மாணவர்களுக்கான

## முன்னோடிப் பரீட்சை-2004



கொழும்பு யாழ்ப்பாணம் வடமராட்சி

ஆகிய இடங்களில்
கணிதம், விஞ்ஞானம் , சமூகக்கல்வி , தமிழ்
ஆங்கிலம் ஆகிய பாடங்கள்

தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பங்குபற்றலாம்

நவம்பர் மாதம் 6,7,8 ஆம் திகதிகளில்

வினாத்தாள்கள் யாவும் கொழும்பில் இருந்து தருவிக்கப்படுகின்றன.

மேலதிக விவரங்களுக்கு: பரீட்சைக்கட்டணம் - 100/=

ROTARACT CLUB - றோட்டறக்ட் கழகம், மானிப்பாய்

CELEBRATE ROTARY 100 Years

0777 677079, 0773017697, 077 3053155

விளம்பர அனுசரணை:
DSI Ranpa
யாழ்.மாவட்ட ஏக முகவர்
இல.13 நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
T.P 021- 222 7621
(சி-38640)(29-43-14-17)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

1 இல் இருந்து O/L வரை தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் SPOKEN ENGLISH மாதாந்தக் கட்டணம் 150/= தனித்தனிக் கவனம் கொடுக்கப்படும். (426), (302), K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.(38221)

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
2005 A/L
★ வினாவிடை வகுப்பு ★
ORGANIC
திரு.மகேஸ்வரன் B.Sc. P.G.D.M Phil. Edu.
புதன், வியாழன் - 6.00 a.m.
ஆரம்பம்: 03.11.2004
புதன்காலை 6.00 மணி
குறிப்பு:-2004 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கும் உரியது.
(38233)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர் **திரு.இ.கெங்காதரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**எஸ்.இளையதம்பி**

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், சகல நலன்புரிச்சங்க அங்கத்தவர்களும், நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், வலி.வடக்கு, தெல்லிப்பழை.
(38230)

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

நாளை 3 ஆம் திகதி முதல் குதூகல ஆரம்பம்
11 மணிக்கு **அன்னை காளிகாம்பாள்** (இலவசக்காட்சி)
2.30, 6.00மணிக்கு இந்தியாவில் 4 தேசிய விருதுகளைப் பெற்ற புரட்சிபடமான **பாரதி**
(சி-38641)

## லக்ஷ்மி சினிமா இணுவில்

இன்று முதல்
சரத்குமார், பார்த்திபன், நக்மா, ஊர்வசி இன்னும் பலர் நடிப்பில்
**அரவிந்தன்** (ரீல்ஸ்)
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே)
(37987)

## ராஜா யாழ்ப்பாணம்

3 ஆவது ஜனத்திரள் வாரம்
இப்பொழுது இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
**7/G ரெயின்போ காலனி** (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38041)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந்த், ஸ்நேகா மற்றும் பலர் நடிப்பில்
**போஸ்** 3ஆம் திகதி வரையும்



காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)
(C-37740)

## நிஜந்தன்ஸ் சங்கானை

சரத்குமார், ஆனந்தபாபு நடித்த
**சேரன் பாண்டியன்** (ரீல்ஸ்)
DARE DRAAVIL
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.


# முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.2

சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி பாலர் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஜனசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் பா.தர்மராசா தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறும்

இதில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ் .மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். ஜி.ஜி. கஜேந்திரகுமார், அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்களை விழாவின் [illegible] வழங்குவர். (4-204)

# திருமலைக் கடற்படைத் தளம் அருகே புலிகளின் இடைத்தங்கல் முகாம்!

## கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிப்பாம்!

கொழும்பு,நவ.2

திருகோணமலைக் கடற்படையின் தளத்திற்கு அருகில் சம்பூர் வனப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தற்காலிக முகாம் ஒன்று கைவிடப்பட்ட நிலையில் கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

இந்த முகாம் பகுதியிலிருந்து கிரனேட் இரண்டும் மற்றும் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட பின்னர் கைவிடப்பட்டதாகக் கூறப்படும் பொருள்களும் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த மூன்று தங்குமிடங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த முகாம் நேற்றுமுன்தினம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குக் காண்பிக்கப்பட்டது.

கடற்படையினர் திருகோணமலைக் கடற்படைத்தளத்துக்கு உட்பட்ட பிரதேசத்தைச் சோதனைக்கு உட்படுத்திய போதே புலிகளின் தற்காலிக முகாம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

இந்த முகாம் புலிகளின் போக்குவரத்துக்கான இடைத்தங்கல் முகாமாகவும் பாவிக்கப்பட்டு வந்துள்ளது எனப் படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளின் கொடிகள், இரண்டு கூடாரங்கள் ஓர் அன்ரெனா, வயர்கள் மற்றும் சிறியரக ஆயுதங்களும் அங்கு கண்டுபிடிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (க-4-6)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

புவியில் 01 - 11 - 1939



இறைபாதம் 19 - 09 - 2004

### திருமதி கனகம்மா வேலாயுதபிள்ளை

19.09.2004 ஞாயிற்றுக்கிழமையன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவி திருமதி வேலாயுதபிள்ளை கனகம்மா அவர்களின் 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (02.11.2004) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதால், இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பில்
க.வேலாயுதபிள்ளை (கணவர்)
(ஓய்வூதியர், இலங்கை மின்சார சபை)

இல.45, புவனேஸ்வரி அம்பாள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.
(38228)(29-43-14-17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பற்றிமா பத்திநாதர்

கரம்பன் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பற்றிமா பத்திநாதர் 31.10.2004 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவிரிமுத்து - மேரிகிறேஸ் தம்பதிகளின் மகளும் பத்திநாதரின் அன்பு மனைவியும் வேளாயினி, கிளாறா, விக்ரோறியா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரெலா செல்வநாயகம் காலஞ்சென்ற டோமினிக் அன்ரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.42, சோமசுந்தரம் அவெனியூ, யாழ்ப்பாணம்.* (38232)(29-43-14-17)
தகவல்: *செ.ஸ்ரெலா (சகோதரி).*

### சங்கரப்பிள்ளை இளையதம்பி

(சோதிடர்)

வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் மகாதனை, தெல்லிப்பழை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் சங்கரப்பிள்ளை இளையதம்பி (சோதிடர்) நேற்று (01.11.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் துளசீதரன் (ஆசிரியர், சைவப்பிரகாச வித்தியாசாலை, தெல்லிப்பழை), கங்காதரன் (கிராம அலுவலர், அளவெட்டி மத்தி - பிரதேச செயலகம், தெல்லிப்பழை), கருணாகரன் (G.T.Z. , N.R.P), மனோகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரகுமாரி, கிருபாநிதி, சுமாலினி ஆகியோரின் மாமனாரும் ஆருணியா, பிருந்தா, அச்சுதன், தேனுஜா, இளங்குமரன், பானுஜா, அருணன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (02.11.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கட்டுப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகாதனை, தெல்லிப்பழை கிழக்கு.* (38227)(43-14-17)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆஸ்பத்திரிக் கழிவுகள் அகற்றும் பணியை இன்றுடன் நிறுத்துகின்றது மாநகரசபை !

## இதனால் அங்கு சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படும் அபாயம்!

காக்கைதீவில் கழிவுப்பொருள்களைக் கொட்டுவதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதனால், யாழ். வைத்தியசாலையின் கழிவுகளை அகற்றும் பணியை யாழ். மாநகர சபை இன்றுடன் நிறுத்துகின்றது என்று ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடனான கூட்டம் ஒன்றை ஆணையாளர் நேற்று மாநகர சபை அலுவலகத்தில் நடத்தினார்.

இந்தக் கூட்டத்திலேயே ஆணையாளர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:-

காக்கைதீவுப் பகுதியில் கழிவுகளைக் கொட்டுவதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக ஆடு, மாடுகளை வெட்டிய கழிவுகள் மற்றும் வைத்தியசாலைக் கழிவுகளைக் கொட்டுவதற்கு அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

எனவே, யாழ்.வைத்தியசாலையின் கழிவுகளை எம்மால் அகற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் அதற்கெனவுள்ள இயந்திரத்தின் மூலம் கழிவுகளை எரியூட்டி அழிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுத்தால் அதற்கான மேலதிக உதவிகளை எம்மால் செய்ய முடியும் என ஆணையாளர் தெரிவித்தார்.

தற்போது மழைகாலமாக இருப்பதால் யாழ். ஆஸ்பத்திரியில் கழிவுகள் அகற்றப்படாத பட்சத்தில் அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதுடன் தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் ஏற்படலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இதுதொடர்பாக உதயன் செய்தியாளர் யாழ்.வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பத்மநாதனிடம் கேட்டபோது-

வைத்தியசாலையில் கழிவுகளை எரியூட்டி அழிப்பதற்குச் சிறிய இயந்திரமே உள்ளது என்றும், இதன்மூலம் தொற்றுநோய்க்குப் பயன்படுத்தும் ஊசி, பிளேற்றுக்கள் மற்றும் இரத்தப் பரிசோதனைக்குழாய்கள் என்பனவையையே எரியூட்டி அழிக்க முடிகின்றது என்றும்-

வழமை போன்று சமையல் அறைக்கழிவுகள், நோயாளர்களால் வீசப்படும் கழிவுகள் என்பவற்றை மாநகர சபையே அகற்ற வேண்டும் என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.(4-7)

## 2007 இல் உலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறமையைக் காட்டுகிறார். நான் எனது திறமையைக் காட்டுகிறேன்.

உலகசாதனை ஒன்றை ஏற்படுத்தினேன். அவர் அதை முறியடித்தார். உலக சாதனை தான் எனது இலக்கு அல்ல. அணியின் வெற்றி தான் எனது இலக்கு.

எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபடும் நோக்கம் எனக்கு இல்லை. அரசியல் இன்று வியாபாரமாகிவிட்டது. அத்தகைய அரசியலில் ஈடுபட விரும்பவில்லை. அரசியலில் இணையாது மக்களுக்குச் சேவையாற்றவேண்டும் என்பதே எனது விருப்பம்- என்றார் அவர். (க-3-4-10)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சுநடத்த இணங்குவது என்று அவர் முடிவு செய்துவிட்டாரானால் அதை உத்தியோகபூர்வமாக நோர்வே அனுசரணையாளர்களுக்கு அறிவிக்கச் சொல்லுங்கள், இது விடயத்தில் தமது முடிவை அவர் பகிரங்கப்படுத்துவது அவசியம்.

"இப்படி ஒரு முடிவை அவர் எடுத்திருப்பதை நோர்வே அனுசரணையாளர்களுக்கு அவர் அறிவித்தாரேயானால், பேச்சுக்களை ஆரம்பிப்பதில் அதன்பின்னர் தாமதம் ஏதும் இருக்காது.

"ஆனால், அப்படி ஒரு திட்டவட்டமான முடிவை எடுத்தாரா, அதில் அவர் உறுதியாக உள்ளாரா என்பவையே கேள்விகளாகும்" - என்று புலிகள் பதிலளித்தனர் என்று அறியவருகின்றது.

பதவிக்கு வந்த காலத்திலிருந்து பேச்சை ஆரம்பிக்கத் தயாரென ஜனாதிபதி கூறிவருகிறார். அது போன்றே ஜனாதிபதியின் இந்தக் கூற்றும் இருக்கக்கூடும் என்றும் தமிழ்ச்செல்வன் அகாஷியிடம் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் அறியவந்தது. (க-3)

## மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகிக் கருகி இருந்தன எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்த இருவருடனும் சம்பவ நேரத்தில் உடனிருந்தார்கள் என்று சந்தேகிக்கப்படும் இரு பெண்களை நேற்று மாலை 4 மணியளவில் சுன்னாகம் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. இறந்தவர்கள் கோழி திருடச் சென்றார்கள் என்று கருதப்படும் வீட்டு, உரிமையாளரிடமும் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

மல்வம் பகுதியில் அண்மைக் காலமாகக் கோழித்திருட்டுகள் அதிகரித்திருந்தன. நேற்று அதிகாலை ஒரு மணியளவில் அப்பகுதியில் உள்ள ஓட்டோச் சாரதி ஒருவரின் வீட்டுக்குச் சென்ற இரு பெண்கள் தமது உறவினர்கள் இருவர் நோய்வாய்ப்பட்டிருப்பதால் அவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றிச்செல்லவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

ஓட்டோச்சாரதி தனது ஓட்டோவுடன் சம்பவ இடத்தை வந்தடைந்தபோது அங்கு இரு சடலங்களே காணப்பட்டன. அவற்றைத் தனது ஓட்டோவில் ஏற்றிச்செல்ல மறுத்துவிட்ட அவர், திரும்பிச் சென்றுவிட்டார். பின்னர் அவரது உதவியுடனேயே குறிப்பிட்ட அந்த இரு பெண்களையும் பொலீஸார் நேற்று மாலை கைது செய்தனர்.

இதேவேளை, உயிரிழந்தவர்கள் இருவரதும் சடலங்கள் வீதியின் அருகிலேயே கிடந்துள்ளன. அங்கிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள வீட்டின் கதவை நேற்றிரவு திடீரெனத் தட்டிய இரு பெண்கள், மின்சாரத்தை நிறுத்துமாறு கூச்சலிட்டுள்ளனர். தமது வீட்டு மின்சாரத்தை நிறுத்தச் சொல்வதற்கு இவர்கள் யார் என்று நினைத்த வட்டு உரிமையாளர்கள் எதனையும் செய்யாமல் தூங்கிவிட்டனர் என்று கூறப்படுகின்றது.

காலையில் எழுந்து பார்த்தபோது அவர்களின் வீட்டின் பின்புறம் இருந்த கோழிக்கூட்டில் எரிய விடப்பட்டிருந்த மின்குமிழ் நொறுங்கிக் கிடந்ததைக் கண்டுள்ளனர். இவர்களிடமும் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

மல்லாகம் நீதி மன்ற நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதுடன், சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவரையும விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

(4-5-6-7-15-49-86)

## ஆளுநர் வருகை ரத்து?

யாழ்ப்பாணத்துக்கு நாளை மேற்கொள்ள விருந்த விஜயத்தை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனா ரத்துச்செய்துள்ளார் எனத் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுப் பணிகளைப் பார்வையிடுவதற்காக இருநாள் விஜயம் ஒன்றை அவர் மேற்கொண்டு நாளை இங்கு வரவிருந்தார். அந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என அறிய வந்தது.

அதேவேளை - யாழ்.செயலகத்தில் ஆளுநர் பங்குபற்றவிருந்த திணைக்களத் தலைவர்களுக்கான கூட்டம் இடம்பெறாது என செயலகம் திணைக்களங்களின் தலைவர்களுக்கு நேற்று அறிவித்துள்ளது. ஆளுநரின் வருகைக்கு எதிராக வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது என பொது அமைப்புகள் முடிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. (3)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுக்குத் தெரிவிக்கும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார்.

இன்றைய சந்திப்பின்போது அந்தச் செய்திகளை தமிழ்ச்செல்வனிடம் தெரிவித்தேன். அந்த செய்தியின் உள்ளடக்கத்தை வெளியிடமுடியாது.

அரசினதும் விடுதலைப் புலிகளினதும் பிந்திய நிலைப்பாடுகள் குறித்து அனுசரணையாளரான நோர்வேயுடன் கலந்துரையாடவிருக்கின்றேன்.

பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. எப்போது பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று கூறமுடியாது. நிச்சயம் பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

நோர்வே சமாதானக் குழுவினர் விரைவில் வருவார்கள் அவர்கள் தமது முயற்சிகளைத் தொடர்வார்கள். பேச்சை ஆரம்பிப்பதற்கான தமது நடவடிக்கைகளை அவர்கள் விரைவில் ஆரம்பிப்பர்.

தெற்கிலும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. ஜனாதிபதி ஏனைய அரசியல் கட்சிகள், மதக் குழுக்களுடன் கலந்துரையாடி வருகின்றார். அக் கலந்துரையாடலின் பின் பேச்சை ஆரம்பிக்கும் நேரம்வரும் என நம்புகின்றேன்.

ஜப்பான் அரசு, சர்வதேச சமூகம் ஆகியன வெளியிலிருந்து, பேச்சை ஆரம்பிப்பதற்கான அனுசரணைப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கும்.

வடக்கு - கிழக்கில் மனிதாபிமான, அவசரப பணிகளை மேற்கொள்ள ஜப்பான் நிதி உதவிகளை வழங்கிவருகின்றது. தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்கும் டோக்கியோவில் இணக்கம் காணப்பட்ட நிதியுதவி, பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஏற்படும் முன்னேற்றத்தைப் பொறுத்தே வழங்கப்படும் - என்றார் அவர். (க-3-5)


புதிய பிரிவுகள் ஆரம்பம்
14-11-2004

இக்கல்வியாண்டு 2003/2004 இற்குரிய இறுதிப் பிரிவுகளிற்கான வகுப்புக்கள் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப்பிரிவில் அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இவ் இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.



நாங்கள் தரத்திற்கும் நேரத்திற்கும் மதிப்புக் கொடுப்பவர்கள்
UNIT
கொழும்பு
விலைக்கே கணனிகள்
எமது விளம்பரத்தை 04 ஆம்பக்கம் பார்க்கவும்
(சி-38633)(13-14-29)





மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.

உத்தரவாதம் உண்டு

விலை 14,000/= மட்டும்

IDD ரூபா 25/=மட்டும்

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு ஒரு நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு ஒரு நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்.

கையிருப்பு முடியும்வரை மட்டும்.
உடனே விரையுங்கள்!
மேலதிக விவரங்களுக்கு:

பவர் செலூலர் ரேடிங் கம்பனி
OFFICE:- இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7070, 0712 399 220, 0777 281 521.
SHOP:- 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-38620)(30-13-14-29)



மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2005

எமது நிறுவனத்தால் ஆண்டுதோறும் கணனித்துறையிலே ஆர்வமுள்ள மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இத்திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் கல்வியாண்டு 2005/2006 இற்கான புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்வரும் கல்வியாண்டு எமது நிறுவனத்தின் 10ஆவது சிறப்பு வெற்றியாண்டு என்பதால் மாணவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.


*விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்...*
*சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்...*

விண்ணப்ப முடிவு திகதி: 30-11-2004

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி-38571)(30-13-14-29)


## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி கைலைநாதன்



கட்டுடையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி கைலைநாதன் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை - நாகம்மா தம்பதிகளின் அருமை மருமகளும் கைலைநாதனின் (ஓய்வுபெற்ற ஊழியர், நீர்ப்பாசனத் திணைககளம்) அருமை மனைவியும் உமைபாலன் (அரச அச்சகக் கூட்டுத்தாபனம்-கொழும்பு) அவர்களின் தாயாரும் பரமேஸ்வரியின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.6, கனகசபை வீதி, வண்ணார்பண்ணையில் இன்று (02.11.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.6, கனகசபை வீதி,*
*வண்ணார்பண்ணை.* (38235)(29-13-14)

தகவல்:
க.கைலைநாதன் (கணவர்).


இணைந்துவிட்டீர்களா?
நிலவு.Com இன் யாழ்.online
275, யாழ்.வீதி, மானிப்பாய். (சி-38626)(29-13-14)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org